திருவள்ளுவர் ஆண்டு 2040

ஏப்ரல் - 2010

# செந்தமிழ்

தொகுதி : 54
பகுதி : 6

விலை ரூ. 10/-

## திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

# மாடப்புறா கூறும் பாடம் !

கவிவேந்தர் கா. வேழவேந்தன்
மேனாள் அமைச்சர்

வான்முட்டும் ஊர்க்கோயில் 'கோபு ர'த்தில்
மாடத்துப் புறாவொன்று கூடு கட்டித்
தான்பெற்ற குஞ்சுடனே வாழ்ந்த போது
தைப்பொங்கல் வந்த தங்கே! பக்தர் கூடி
மேன்மைமிகு கோபுரத்தின் மேலே ஏறி
மெருகூட்டும் வண்ணங்கள் தீட்ட லானார்!
ஏனென்று கேளாமல் புறாகுஞ் சோடே
இடம்பெயர்ந்து 'மசூதி'யொன்றில் குடியே றிற்று !

சிலநாள்கள் கடந்தபின்னர் இரம்சா னுக்காய்ச்
சீர்வெள்ளை யடிப்பதற்கே மசூதி உச்சி
சிலர்ஏறப் புறாக்குடும்பம் வெளியே றிற்று !
சிறிதளவும் கவலையின்றி அருந்தி ருந்த
சிலுவையுள்ள 'சர்ச்' ஒன்றின் முகடு சென்று
திருப்தியுடன் வாழ்ந்தனவே கூட மைத்தே !
கலைப்போர் மதங்களுக்குள் மூண்ட தாலே
கத்திகளால் பெருகியதே இரத்த வெள்ளம் !

தாயிடத்தில் இதைக்காட்டிப் புறாவின் சேயும்,
'தக்கபதில் சொல்லம்மா, நாமும் கூட
கோயிலிலே, மசூதியிலே, சர்ச்சின் மேலே
குடியிருந்தோம் பேதமின்றி ! மனிதர் மட்டும்
தீயமத வெறியோடு வெட்டிக் கொண்டு
தினம்மடிவ தேன்?' என்றே கேட்க, தாயும்,
'தூயவர்நாம் அதனால்தான் உயரே உள்ளோம்;
துன்மார்க்கர் கீழ் உள்ளார் !' என்ற தம்மா !

# செந்தமிழ்

(தோற்றம் 1902)


தொகுதி : 54 திங்கள் இதழ்

பகுதி : 6 திருவள்ளுவர் ஆண்டு 2040

ஏப்ரல் 2010




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


**முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி**
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

**ஆசிரியர்**
**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்

பாசறைப் புலம்பலும் நெஞ்சும் 4
*முனைவர் சோ. முத்தமிழ்ச்செல்வன்*

வடக்கிருத்தல் *ஆறுவிரல் ஐம்பொறி* 8

தரம் உயருமா தமிழியல் ஆய்வுகள்? 10
*முனைவர் பூந்துறையான்*

சிகரம் கால் வைப்பாய் *கவிஞர். நீரை. 'அத்திப்பூ'* 12

வாழ்க தமிழ் ! *வி. நாகசுந்தரம்* 13

தமிழ் ஓர் உயர் தனிச்செம்மொழி 20
*தோ.சி. தங்க பாண்டியன்*

' தொலைப்பேசிக் கண்ணீர்',
'பால்வீதி' ஆகிய கவிதை நூல்களில்
காணலாகும் உள்ளடக்கூறுகள் ஓர் ஆய்வு! 24
*த. செந்தமிழ்ச் செல்வன் எம்.ஏ., எம்.பில்.*

திருக்குறள் வரலாறு *ரா. ராகவய்யங்கார்* 31

தொல்காப்பியத்தில் கண்டும் காணாமை 35
*தி. பக்கிரிசாமி*

# இதழ் மணம்

**அன்புடையீர்,**

**செந்தமிழ் வாசகர்களுக்கு வணக்கம்.**

சங்க கால இலக்கியங்களில் புறப்பாடல்களை விட அகப் பாடல்களே மிகுதியும் இடம் பிடித்துள்ளன. காதல் கொண்ட தலைவனை விட தலைவிக்குத் தான் மன உளைச்சல் மிகுதி. தன் தலைவியின் மன உணர்வுகளை நினைத்து வருந்துகிறான் தலைவன். பருவநிலை மாற்றங்களும் அவனை வேதனையடையச் செய்கின்றன. இதனைப் 'பா்சறைப் புலம்பலும் நெஞ்சும்' எடுத்தியம்புவதைக் காணமுடிகின்றது. புலம்புதல் தலைவிக்கு மட்டுமல்ல தலைவனுக்கும் தான் என்பதனை முனைவர் சோ. முத்தமிழ்ச் செல்வன் சான்றுகளுடன் பகர்கின்றார்.

இலக்கண இலக்கியங்களில் வடக்கிருத்தல் பற்றிய குறிப்புகள் காணக் கிடைக்கின்றன. மேலும் வடக்கிருந்து உயிர் துறந்தவர்களைப் பற்றிய குறுந்தகவல்களும் ஆறுவிரல் ஐம்பொறி அவர்களால் காட்டப்படுகிறது. இலக்கியங்கள் மட்டுமல்லாது தமிழின் தரமும் வீழ்ந்து வரும் நிலையில் ஆய்வின் நிலைகள் எப்படி இருக்கின்றன என்று முனைவர் பூந்துறையான் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார். இவை மட்டுமல்லாமல் தனி மனிதனின் ஏற்றம் குறித்து கவிஞர். நீரை. அத்திப்பூவின் கவிதை, சிகரத்தில் கால்பதிக்கவே செய்கின்றது.

பழந்தமிழர்கள் வாணிபம் செய்த துறைமுகப் பட்டினங்கள் பற்றிய குறிப்புகளும், அவை தற்போது இருக்கின்ற நிலையினையும் வி. நாகசுந்தரம் அவர்கள் சான்றுகளுடன் எடுத்தியம்பி உள்ளார். இவை தவிர உலகின் மூத்த மொழிகளுள் தமிழ் தன்னை முழுமையாக அடையாளப்படுத்தி வருவதை தோ. சி. தங்க பாண்டியன் கட்டுரை விரிவாகக் கூறுகின்றது. கவிக்கோ. அப்துல் ரகுமானின் படைப்பினைச் செந்தமிழ்ச் செல்வன் கட்டுரை நிறைவு செய்கின்றது.

எந்தவொரு அறிஞரும், ஆராய்ச்சியாளரும் சுட்டிக் காட்டாத செய்தியினை ரா. ராகவய்யங்கார் அவர்கள் சுட்டிக் காட்டுவது ஒரு நூற்றாண்டிற்கு முன்னே நம்மை அழைத்துச் செல்கிறது.

மேலும் தொல்காப்பியத்தில் இயல்களையும் சூத்திரங்களையும் மட்டுமே அறிந்தவர்களுக்கு தி. பக்கிரிசாமியின் கண்டுகொள்ளும் தன்மையோடு இவ்விதழ் தங்களின் கைகளில் தவழ்கிறது.

**இனி நீங்களும் இதழும்....**

**முனைவர் க. சின்னப்பா**

# பாசறைப் புலம்பலும் நெஞ்சும்

*முனைவர் சோ. முத்தமிழ்ச்செல்வன்*
விரிவுரையாளர், தமிழ்த்துறை
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி
சிவகாசி

மன்னனின் போர்த் தொழில் காரணமாகத் தலைவன் தன் தலைவியைப் பிரிந்து செல்கிறான். அங்கு போய் பாசறை அமைத்துத் தங்குகிறான். சில காலங்களில் விரைவாய்ப் போர் முடிந்துத் திரும்பிவிடுவான். வேறு சில காலங்களில் போர் முடிவுறாமையால் பாசறையில் தங்கியிருப்பான். இங்ஙனம் போர் முடிவுற்றுத் திரும்புகிற சமயத்திலும் போர் முடிவுறாமையால் பாசறையில் தங்கி இருக்கின்ற சமயத்திலும், தலைவன் தன் தலைவியை நினைத்து நெஞ்சிடம் புலம்புவான். இவ்வகையில் தலைவன் துன்பநிலையில் மட்டும் பதினேழு பாடல்களில் பேசுகிறான். இதனைப் போர்த்தொழில் முடிந்தவிடத்துப் புலம்பல், போர்த்தொழில் முடியாதவிடத்ததுப் பாசறைப்புலம்பல் என இருவகைப்படுத்தலாம்.

## போர்த்தொழில் முடிந்தவிடத்துப் புலம்பல்

தலைவன், தன் வேந்தனின் போர் நிமித்தமாகத் தலைவியைப் பிரிந்து சென்றான். அங்ஙனம் சென்ற விடத்து விரைவில் போர் முடிவுற்றது. ஆதலால் தலைவன் பொருள் தேடித்திரும்புகின்ற விடத்து தன் நெஞ்சிடம் பேசுகிறான். இங்ஙனம் பேசுமிடம் ஒன்றாகும். இதனை, போர் முடிவுற்ற அகநானூற்றுத் தலைவன், தன் நெஞ்சிடம், ''நெஞ்சே நம் தலைவி நம்மைப் பார்த்து, வருவேன் என்று சொல்லிச் சென்ற நாளும் பொய்த்தன. நம் கண்ணீரும் ஓடிக்கொண்டே இருக்கிறது. முல்லைமாலை சூடும் அழகை இழந்த கூந்தலையும் அவர் நினையார் ஆயினர். நமக்கு அவர் செய்யும் அருள் மாறிவிட்டது. அறத்துக்கும் அவர் அஞ்சவில்லை என்று தன் தோழியிடம் சிறியவாகச் சொல்லாடி பெரியவாக வெறுத்து நிற்பாள். ஆயினும், வேந்தன் போரில் பகைவரை வெற்றிகண்டான் என்ற செய்தியை யாரேனும் அவளிடம் உரைப்பாரானால் நம்மிடம் இருந்து வெறுப்பு நீங்கி மகிழ்ச்சி அடைவாள்'' (அகநானூறு 144) எனத் தலைவன் உரைத்தான். இதில் தலைவனைப் பிரிந்தமையால் தலைவிக்கு ஏற்பட்ட துன்ப உணர்வு எடுத்துரைக்கப்பெற்று, அந்த நிலை சிறிது காலத்திற்குள் மாற்றம் பெற்றுவிடும் என உறுதியளிக்கும் நிலை புலப்படுகிறது.

## போர்த் தொழில் முடியாதவிடத்துப் பாசறையில் இருந்து புலம்பல்

தலைவன் வேந்தனின் போர்த்தொழில் காரணமாகச் சென்றான். அங்ஙனம் சென்றவிடத்துப் போர் இன்னும் முடிவுறாமையால், போர்ப் பாசறை அமைக்கப் பெற்றது. அந்தப் பாசறையில் இருந்து தன் நிலையையும்

தலைவியின் நிலையையும் நினைத்துத் தன் நெஞ்சிடம் புலம்புகின்றான். இதன் தன்மைகளை "குறித்த பருவம் வந்துவிட்டமை, பாசறையில் இன்னும் வினை முடியாமை, தனது இயற்கைச் சூழல், பூக்கோள் விலக்கிச் செல்லும் தன் விரைவு அறியாத தலைவியின் இயல்பு, கார்காலத்தில் தலைவி என்ன நிலையானாளோ என்ற வருத்தம், மன்னன் நிலை, தனது பொறுப்பு, மாலையில் கோவியர் இசை" என வகைப்படுத்திக் காட்டும் திறம் ஈண்டுக் கருதத்தக்கது. அங்ஙனம் புலம்புமிடம் பதினாறாகும். இதன் சூழல்களை, பருவம் நினைத்துப் புலம்பல், தன்நிலை குறித்துப் புலம்பல், தலைவி நிலை குறித்துப் புலம்பல், இருவர் நிலை குறித்துப் புலம்பல் எனும் சூழல்களில் வகைப்படுத்தலாம்.

## பருவநிலை குறித்துப் புலம்பல்

தலைவன் வேந்தனுக்குப் போர்க் காலத்து உதவிக்குச் சென்றான். அங்கு சென்றவிடத்து போர் முடிவுறவில்லை. ஆனால், குறித்த பருவ வரவு வந்தது. அதனைக் கண்ட தலைவன், "நெஞ்சே, இரு பெரும் வேந்தர் பகைத்துக் கொண்டனர். அதனால் பெரும் போர்க்களத்தில் ஒப்பற்ற படையினைக் கொண்டு மாற்றார் படையைப் புறமுதுகிட்டு ஓடச் செய்தனர். இதில் செல்வம் உடையவர்க்கு வெற்றி உண்டு எனக்கூறி, தண்ணுமையுடன் கூடி அரசன் அளிக்கும் பூந்தோளினையும் ஏற்றுக்கொண்டேன். நாம் விரைந்து ஊர் திரும்புவதைத் தலைவி அறியாள். அவள், கார்காலத்து மேகம் முழங்குந்தோறும் செயலற்று, ஒடுங்கி பசலைபூத்த மேனியளாய் எவ்வாறு ஆற்றியிருப்பாளே! என மொழிந்தான். அதுமட்டுமின்றி மாரிக் காலத்து மாலை நேரத்தில் இல்லறத்திற்கு வரும் கோவலர் குழலிசையும், பெரும் துன்பம் தரும் செவ்வழிப் பண்ணின் ஓசையும் தனித்திருக்கும் தலைவிக்கு என்ன துன்பத்தைக் கொடுக்குமோ!" (அகநானூறு 174, 214) எனப் புலம்பலுற்றான்.

ஐங்குறுநூற்றுத் தலைவன் பாசறையில் இருந்து பருவ வரவைக் கண்டு தன் நெஞ்சிடம், "நெஞ்சே, செம்முல்லை பனியால் வளர்கிறது; அதன் அரும்புகள் சிச்சிலிப் பறவையின் வாய்போல் சிவந்தவை; அவை அசைகின்ற சிறகுகளை உடைய வண்டினம் அமர மலர்ந்தன. மேலும் தேனை உண்டு வண்டுகள் பாடுவதற்குக் காரணமாய் அமைந்தன. அது கார்கால நிகழ்ச்சியாதலால் நானும் என் தலைவியின் நெற்றியைக் காண்பதற்கு விருப்பமுடையவன் ஆனேன். ஆதலால், போர்த் தொழிலில் கட்டுண்டு நிற்கும் வேந்தனுடைய உள்ளம் அதிலிருந்து விடுதலை பெற்று நிற்கவேண்டும்" (ஐங்குறுநூறு 443, 447, 449) என மொழிந்தான்.

பிறிதொரு ஐங்குறுநூற்றுப் பாசறைத் தலைவன், "நெஞ்சே, பாசறையில் போர் முரசு ஒலித்துக் காலைப் பொழுதினை அறிவித்தது. சினம் மிகுந்த வேந்தன் மேற்கொண்ட தொழிலை நிறைவேற்றத் தொடங்கினான். மேகங்கள் மழை பெய்து கார்ப்பருவத்தைத் தொடங்கி வைத்தன. இனித் தலைவியைக் கூடி இன்பம் துய்க்கலாம் என்று அவளை நினைத்து நினைத்து

உறக்கம் கொள்ளாது மேற்கொண்ட தொழிலின் மீதும் காதலியின் காதல் மீதும் மாறி மாறி மனத்தைச் செலுத்தி நான் மயக்கமுற்றேன்'' (ஐங்குறுநூறு 448) எனப் புலம்பினான். மேலும்,'' என் மயங்குதலைப் போக்கும் வகையில் வேந்தன் தான் மேற்கொண்ட வினையை முடித்து விடுவான் என்றால், என் காமத்துன்பம் நீங்க, தலைவியின் மார்புகளைக் கூடி, நல்ல உறக்கத்தைப் பெறுவேன்.'' (ஐங்குறுநூறு 450) அது மட்டுமின்றி, நம் கற்புடைய தலைவி சிறந்த விருந்தைப் பெற்று இன்புறுவாள் எனக் கூறினான்.

இதனை,

*''பெருஞ்சின வேந்தன் அருந்தொழில் தணியின்*

*விருந்துநனி பெறுதலும் உரியள் மாதோ*

*இருண்டு தோன்றும் விசும்பின் உயர்நிலை உலகத்து*

*அருந்ததி அனைய கற்பின்,*

*குடும்பை மணிப்பூண் புதல்வன் தாயே''* (ஐங்குறுநூறு 442)

எனும் அடிகள் சுட்டும்.

இவற்றின் வழி, பருவ வரவினால் தலைவிக்கு ஏற்பட்ட துன்பநிலையையும், அவரது நலன்களையும் கூறுகின்ற நிலை புலப்படுகிறது. மேலும் தன் நெஞ்சின் மனத்தடுமாற்றமும் தலைவியைத் தழுவிப் பெறும் இன்பமும் அவள் விருந்தினரைப் பேணும் சிறப்பும் கூறப்பெற்றுள்ள நிலையை அறியமுடிகிறது.

## தலைவி நிலை குறித்துப் புலம்பல்

வேந்தனின் போர்த்தொழில் காரணமாகத் தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்தான். அங்கு சென்ற இடத்தில் போர் முடிவுறாமல் நீண்டு கொண்டே சென்றது. அதனால் பாசறையில் இருந்து தன் நெஞ்சிடம் ஒரு அகநானூற்றுத் தலைவன் ''நெஞ்சே, வறண்ட காடு கவின்பெற மழை மிகுந்து பொழிந்ததால் வண்டுகள் ஆர்ப்பரிக்கின்றன. வெஞ்சின வேந்தன் போர்த் தொழிலை விடுவானாயின் தலைவன் நிலை என்னாயிற்றோ, என மயங்கி நிற்பாள் நம் தலைவி. அவள் சிந்தும் கண்ணீர்த்துளி காய்ந்து தங்கும் கண்ணோடு வருந்தி இல்லறத்தில் துன்பத்துடன் காணப்படுவாள். ஆதலால் எனது இழந்த காதல் நலத்தைப் பெறுவதற்கு இது தக்க காலமாகும்''(அகநானூறு 164) என மொழிந்தான். இதில் தலைவனைப் பிரிந்தமையால் தலைவி கண்ணீர் சிந்தும் கண்களோடு, பொலிவு இழந்து காணப்பெறுவாள் எனும் செய்தி புலனாகிறது.

## தன்நிலை குறித்து வருந்துதல்

போர் காரணமாகப் பிரிந்து சென்ற தலைவன் பாசறையில் இருந்து தலைமகளை நினைத்துப் புலம்புகிறான். அப்போது தன் நெஞ்சிடம்,

''நெஞ்சே, வேந்தன் போர் காரணமாகத் தலைவன் பாசறைக்கண் வினைமேற் கொண்டு வேற்று நாட்டில் தங்கினான். அங்குத் தங்கியவன் தலைவியை நினைத்தமையால் பெருந்துன்பத்திற்கு உள்ளானான். அதனைத் தலைவி அறியாள். அதனால் நமக்கு அருள் செய்யாதவர் பெரிதும் அறம் உடையவர் அல்லர் என்று எம்மை நொந்து வெறுப்பாளே? யான் அறியேன்'' (அகநானூறு 304) என்று அகநானூற்றுத் தலைவன் ஒருவன் கூறினான். மேலும் பிறிதொரு ஐங்குறுநூற்றுத் தலைவன் தன் நெஞ்சிடம், ''புகழ் நிறைந்து சிறப்பினை உடைய காதலியைப் புலம்பும்படி விட்டுவிட்டுப் பாசறைக்கு வந்துவிட்டாய். அருந்தொழிலை உடைய பாசறைக்கண் பெண்ஏற்றை ஆண்காளை தழுவிச் செல்கிறது. அவற்றின் செயலை நினைத்து நீ வருந்துகின்றாய்'' (ஐங்குறுநூறு 445) எனத் தலைவன் தன்னை நொந்து மொழிந்தான். இதனால் பாசறைக்கண் இருந்த தலைவன் தன் நிலையை நினைத்து நொந்து வருந்திய நிலை புலனாகிறது.

## இருவர்நிலை குறித்துப் புலம்பல்

வேந்தன் போர் காரணமாகப் பிரிந்த பாசறைத் தலைவன், பாசறையில் இருந்து தன்நிலையும் தலைவி நிலையையும் ஒருசேர நினைத்துப் பார்க்கிறான். இதனை, தன் நெஞ்சிடம் அகநானூற்றுத் தலைவன் ஒருவன், ''நெஞ்சே, மழைபெய்யும் கார்காலம் வந்துவிட்டது. இந்தப் பருவத்தில் தலைவியோ, தனியாளாய்த் தன் சிற்றூரிலே தனித்திருக்கிறாள். யாமோ, இரவில் உறக்கம் நீங்கிய சோலையை உடைய வேந்தனது பாசறையை துணையாக இருக்கின்றோம்'' (அகநானூறு 24,84) எனப் பேசுவதால் உணரலாம்.

மேலும் நற்றிணைத் தலைவன் தன் நெஞ்சிடம், ''நெஞ்சே, அங்கோ வெள்ளியாலே செய்யப்பட்ட பறையை அடித்துச் சிறிது நேரம் விளையாடுவான். அந்த விளையாட்டுப் பிடிக்கவில்லை என்றால் தன் தாயிடம் சென்று பால் பருகுவான். அதன் பின்னர் இங்கும் அங்குமாக அலைந்து சிறு குச்சியைக் கையில் எடுத்துக் கொள்வான். அவன் அருகில் வருவோரை அடிப்பேன் எனப் பயமுறுத்துவான். இடைஇடையே சில சொற்களைப் பேசி விளையாடுவான், பயமுறுத்துவான். அவனே என்னுடைய மகன். அவன் தான் என் மனைவிக்குத் துணை. இங்கோ, மன்னர் நாட்டில் போர் முனையிடத்தே குளிர்ந்த மழை பொழிகிறது. மழைநீர் அருவியாக ஓடுகிறது. பின்பு நடுயாமமும், கூதிர்காலமும் வந்துவிட்டது. யான் என் காதலியைப் பிரிந்து தனியாகப் பாசறையில் இருக்கிறேனே'' (நற்றிணை 314) எனத் தலைவன் புலம்பினான். ஈண்டு தலைவி இல்லறத்தில் படும் வேதனையும், தலைவன் பாசறையில் படும் துன்பமும் ஒருசேரப் புனையப்பட்டுள்ளது. காரும் போரும் முன்நிற்கையில் பாசறைக்கண் இருந்து தலைவியை நினைத்துப் புலம்பும் தலைவனின் காதல் மனம் அகத்தில் இடம்பெறுவதனைக் காணவியலுகிறது.

# வடக்கிருத்தல்

*ஆறுவிரல் ஐம்பொறி*
வீரசோழபுரம் 606 206
கள்ளக்குறிச்சி மாவட்டம்
விழுப்புரம் மாவட்டம், தமிழ்நாடு.

கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய நான்கு திசைகளுள் வடக்குத் திசை புண்ணிய திசையாகக் கருதப்பட்டது. சிலப்பதிகாரத்தில் இந்திர விழவு ஊர் எடுத்த காதையில் 94 ஆம் அடி வடக்குத் திசையைப் புண்ணிய திசை என்று புகழ்கிறது.

**புண்ணிய திசைமுகம் போகிய அந்நாள்**

சோழ மன்னன் திருமாவளவன், புண்ணிய திசை என்று கூறப்படும் வடக்குத் திசை நோக்கிப் படையெடுத்துச் சென்றதை இவ்வடி இயம்புகிறது.

*குடபால் வடபால் குணபாறென் பாலென்*
*றடைவே திசைநான் கவற்றுள் - இடையிரண்டு*
*நன்மைபுரி வோர்பயந்து நோக்குப வேனைய*
*வண்மை புரிவோர்க்கே யாம்.*

இந்நேரிசை வெண்பா தண்டியலங்காரத்தில் நிரனிறை வழுவிற்குச் சிறப்பு விதி கூறும் 110 ஆம் நூற்பாவிற்கு எடுத்துக் காட்டுச் செய்யுளாக அமைந்துள்ளது. 'மேற்கு, வடக்கு, கிழக்கு, தெற்கு என்றமைந்துள்ள நான்கு திசைகளுள் இடையிரண்டு திசைகளை (வடக்கு, கிழக்கு) நற்கருமம் செய்வோர் நோக்குவர். ஏனைய இரண்டு திசைகளை (மேற்கு, தெற்கு) தீக்கருமம் செய்வோர் நோக்குவர்' என்பதே இவ் வெண்பாவின் பொருளாம். இவ் வெண்பாவின் மூலமும் வடதிசை புண்ணிய திசை என்பதை அறியலாம்.

இடையூறு, தீராத நோய், மிகுந்த மூப்பு இவற்றுள் ஒன்றுண்டான போது சிலர் புண்ணிய திசையாம் வடக்கிருந்து உயிர் துறந்தார். வடக்கிருப்பவர் ஆற்றங்கரையில் தருப்பைப் புல் மீது புண்ணிய திசையாம் வடக்கு நோக்கி அமர்ந்து உயிர்போகும் வரை உண்ணா நோன்பிருந்து உயிர் துறப்பர்.' இதனை வடக்கிருத்தல் என்ற

சொல்லால் தமிழ்மொழி நவில்கிறது. வடக்கிருந்து உயிர் துறந்த சிலரைப் பற்றி இவண் காண்போம்.

சேரமான் பெருஞ்சேரலாதன் வெண்ணிப் போரில் மார்பில் தைத்த அம்பு ஊடுருவி முதுகில் புண்பட்டான். அவன் புறப்புண் பட்டதை மானம் இழந்ததாகவே கருதினான். நாண் கொண்டான். மானம் இழந்தபின் உயிர் வாழ்தல் தகாது என்று அவன் வடக்கிருந்து உயிர் துறந்தான்.

கோப்பெருஞ் சோழனுக்குப் பிறந்த மைந்தர்கள் இருவரும் தீய குணங்களைப் பெற்றிருந்தனர். தகுதியற்ற தன் மைந்தர்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கச் சோழன் விரும்பவில்லை. இதனால் தந்தையின் மீது மைந்தர்கள் பகை கொண்டனர். போர் செய்ய ஆயத்தமாயினர். புல்லாற்றூர் எயிற்றியனாரின் அறவுரை கேட்டுச் சோழன் போரைத் தவிர்த்தான். பின்னர் அவன் வாழ்க்கையில் வெறுப்புற்றுக் காவிரியாற்றின் வடகரையில் வடக்கிருந்து உயிர் துறந்தான்.

புலவர் பிசிராந்தையாரும் தன் மாசற்ற நண்பர் கோப்பெருஞ்சோழனுடன் வடக்கிருந்து உயிர் துறந்தார்.

வள்ளல் பாரியின் கெழுதகை நண்பராய்த் திகழ்ந்தவர் கபிலர். பாரி மறைந்தபின் கபிலர் பாரியின் மண வயதுப் பெண்களுக்கு மணம் செய்வித்து வாழ்வளித்தார். பின் அவர் திருக்கோவிலூரில் பெண்ணையாற்றிடைக்குறையில் உள்ள (கபிலர்) குன்றில் வடக்கிருந்து உயிர் துறந்தார். கபிலர் தீக்குளித்ததாக சில ஏடுகள் கூறுவது உண்மையல்ல.

வடக்கிருந்து உயிர்துறந்தவர்களின் வாழ்க்கையின் மூலம் சில நன்னீர்மைகளை அறிய முடிகிறது. அவை போரில் புறப்புண் படல் இழிவு, மானம் இழந்தபின் உயிர் விடுகை சால்பு, தீயவர் எனின் மைந்தரையும் வெறுத்தல், அகம் நக நட்பு கொள்ளுதல், தினைத்துணை உதவி பெறினும் பனைத்துணையாக நன்றி செலுத்துதல், உயிருக்கு அஞ்சாமை ஆகும்.

நம் முன்னோரின் நன்னீர்மைகளை ஒல்லும் வகையான் உன்னி உன்னிப் பெருமிதம் அடைவோமாக.

# தரம் உயருமா தமிழியல் ஆய்வுகள்?

| முனைவர் பூந்துறையான்

"தமிழர்களுக்குத் தொன்றுதொட்டு வரலாற்றுணர்வு இல்லை என்பது போல இங்குள்ளவர்களாகிய நமக்கும் நம் தொடர்பான தகவல்களைக் கூடப் பேணிப் பாதுகாக்கக் கூடிய பழக்கமில்லை. ஆம்! தமிழியல் ஆய்வுத் தலைப்புகளைக் கூடத் தொகுத்து வைக்கின்ற பழக்கம் நம்மிடம் இல்லை என்பதை மிகுந்த மனச் சோர்வுடன் சுட்டிக் காட்டுகிறார், தமிழியல் ஆய்வு (1988) நூலின் பதிப்பாசிரியர் முனைவர் கதிர். மகாதேவன்.

20 ஆண்டுகளுக்கும் பிறகும் இந்த நிலையில் எந்த மாற்றமும் இல்லை.

இக்கட்டுரையாளர், இதற்காகப் பல முயற்சிகள் எடுத்தும் இது குறித்த குறைந்தர அளவு ஒத்துழைப்புக் கூடக் கிடைக்கவில்லை.

கிட்டத்தட்ட 20-க்கு மேற்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு வேண்டுகோள் கடிதங்கள் அனுப்பியும் இரண்டு பல்கலைக்கழகங்கள் (1. அழகப்பா பல்கலைக்கழகம் 2. காந்திகிராமம் கிராமியப் பல்கலைக்கழகம்) மட்டுமே தங்கள் பல்கலைக்கழகத்தில் செய்யப்பட்டத் தமிழியல் ஆய்வுத் தலைப்புகளின் பட்டியல்களை அனுப்பி வைத்தனர்.

பாரதியார் பல்கலைக்கழகத் தமிழியல் ஆய்வுத் தலைப்புகளின் பட்டியல், ஆர்வலர் இருவரின் தனிப்பட்ட முயற்சியால் நூல் வடிவம் பெற்றுள்ளது. தனியார் இணையதளம் ஒன்றிலும் வெளியிடப்பட்டுள்ளது.

மற்றப் பல்கலைக்கழகங்களில் என்னென்ன தலைப்புகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன என்பது எவருக்கும் தெரியாது.

பேராசிரியர்கள் பலருடன் தொடர்பு கொண்டு, தொகுத்தும் 3000 தலைப்புகள் கூடத் தொகுக்க இயலவில்லை. கிட்டத்தட்ட 4000 தலைப்புகள் வரை ஆய்வுகள் மேற்கொண்டிருக்க வாய்ப்பு உண்டு.

இந்த நிலை, செய்த தலைப்பிலேயே மீண்டும் செய்யும் அவல நிலையை ஏற்படுத்துகிறது. செய்து முடித்த பின் இத்தலைப்பு ஏற்கனவே செய்யப்பட்டது என அறியும் போது அத்தனை உழைப்பும் வீணாகி ஆய்வு செய்யும் ஆர்வமும் அழிந்து விடுகிறது.

அண்மையில் மாணவி ஒருவர் ஒரு தலைப்பை எடுத்துக் கொண்டு திருச்சி, மதுரை, சென்னை என அலைந்து எங்கும் செய்யப்படவில்லை என்பதை உறுதி செய்து கொண்டு ஆய்வில் ஈடுபட்டு வருகிறார்.

வழிகாட்டிப் பேராசிரியர்களின் சோம்பலும் ஆர்வ மின்மையும் இளம் ஆய்வாளர்களை ஏதோ ஒரு தலைப்பில் எதையோ சிலவற்றை எழுதி "ஆய்வாளர் பட்டம்" பெற வைத்து விடுகின்றன.

இன்றைய தமிழியல் ஆய்வுகளின் இரங்கத் தக்க நிலையை எடுத்துரைக்கத் தனிக் கட்டுரையே வேண்டும்.

செம்மொழித் தமிழ் மாநாடு நடைபெறும் இந்தத் தருணத்திலாவது, இந்தக் குழப்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

எல்லாப் பல்கலைக்கழகங்களும் தாம் தொடங்கிய நாளிலிருந்து 2009 வரை, செய்யப்பட்ட அனைத்துத் துறை ஆய்வுத் தலைப்புகளையும் தத்தம் இணைய தளங்களில் வெளியிட வேண்டும். 1. ஆய்வுத்தலைப்பு 2. ஆய்வு வழிகாட்டி 3. செய்யப்பட்ட ஆண்டு 4. நூலாக வெளிவந்தமை போன்ற முழுவிவரங்களுடன் தமிழ், ஆங்கிலம் என இரு மொழிகளிலும் வெளியிட வேண்டும்.

தமிழியல் ஆய்வுகள் தொடர்பானவற்றை ஒருங்கு தொகுத்துக் தமிழ்ப் பல்கலைக்கழகம் அல்லது தமிழ் இணையப் பல்கலைக்கழகம் தம் இணைய தளத்தில் வெளியிட வேண்டும். இனி வரும் நாள்களில், பதிவு செய்யப்படும் தலைப்புகள், ஆய்வாளர்கள், வழிகாட்டிகள் போன்ற விவரங்களை எல்லாப் பல்கலைக்கழகங்களும் தத்தம் இணைய தளங்களில் வெளியிட வேண்டும்.

வாய்மொழித் தேர்வு நடைபெறுவதற்கு 30 நாள்களுக்கு முன் ஆய்வேட்டினை இணைய தளத்தில் வெளியிட வேண்டும். அது குறித்த செய்தியினை, அவ்வத்துறை சார்ந்த அறிஞர்களுக்கும் ஆய்வு மாணவர்களுக்கும் மின்னஞ்சல் அல்லது குறுஞ்செய்தி வாயிலாகத் தெரிவிக்கப்பட வேண்டும்.

யார்யாருக்குச் செய்தி தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் பல்கலைக்கழக அறிக்கைப் பலகையிலும் குறிப்பிட்ட சில செய்தித் தாள்களிலும் வெளியிடப்பட வேண்டும்.

இவை முறைப்படி நடைபெறப் பல்துறை அறிஞர்கள் கொண்ட கண்காணிப்புக் குழு ஒன்றை அரசு ஏற்படுத்தி, அதனிடம் மூன்று மாதத்திற்கு ஒரு முறை அறிக்கை பெற வேண்டும். அதனை அரசின் இணையத்தளத்தில் வெளியிட வேண்டும்.

இதைச் செய்யாவிடில் ஆய்வு செய்து முடித்த பலர், தம் ஆய்வேட்டை வெளியிட்டால் கேலி செய்வார்களே என்று வெளியிடவும் முடியாமல் மற்றவர்கள் எல்லாம் வெளியிடுகிறார்களே நம்மால் வெளியிட முடியவில்லையே என ஏங்குவதைத் தவிர்க்க முடியாது.

பல்கலைக் கழகங்களுக்குப் பலகோடி ரூபாய் செலவிட்டும் தமிழியல் ஆய்வுகள் உரிய தகுதியையும் பயனையும் பெற இயலாதது மட்டுமல்ல; உயர்கல்வித் துறையில் தகுந்த அறிஞர்களும், ஆய்வாளர்களும் இன்மையால் புதிய துறைகள், ஆய்வுகள் போன்றவற்றை மேற்கொள்ள இயலாமல் ஆய்வுக்கு என ஒதுக்கப்பட்ட பெரும் தொகைகள் பயன்படுத்தப்படாமல் கிடக்கின்ற அவல நிலை மாறாது. இது தமிழ்த்துறைக்கு மட்டுமல்ல, எல்லா அறிவுத் துறைகளுக்கும் பொருந்தும் என்பதை அண்மையில் வெளிவரும் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.

# சிகரம் கால் வைப்பாய்

**One day your dreams come true.**
**One day your presence will be precious.**
**One day you will be**
**the happiest person**
**in this world and that day is today.**

என்றோ ஒருநாள்
உனது கனவுகள்
எல்லாம் வெற்றிக் கனிநல்கும் - அதில்
இதயம் மகிழ்ந்து
பூரிப் பாகும்
இணைந்த உனது அணிவெல்லும்.

என்றோ ஒருநாள்
உனது சிறப்பு
எல்லோர் முன்னும் விரிவாகும் - உன்
இமையும் வியப்பில்
மலர்ந்து விரிந்து
இதயம் மகிழ்ந்து நிறைவாகும்.

என்றோ ஒருநாள்
இன்பக் கடலில்
இனிமை சிறப்பில் நீந்திடுவாய் - உனை
எல்லோர் கவியும்
பாடத் தொடங்கும்
ஏற்றம் பெற்று வாழ்ந்திடுவாய்.

அந்த நாளும்
இன்று இன்றே
அடியை முன்னே வைத்திடுவாய் - உன்
அத்தனை அணுவும்
அதற்கே உழைக்கும்
ஆமாம் சிகரம்கால் வைத்திடுவாய்.

கவிஞர். நீரை. 'அத்திப்பூ'

# வாழ்க தமிழ் !

வி. நாகசுந்தரம்
செயலாளர்
அண்ணாநகர் தமிழ்ப்பேரவை
சென்னை 600 040

## சங்ககாலத் துறைமுகப்பட்டினங்கள்

2005 ஆம் ஆண்டிலிருந்தே கேரள அரசின் அகழ்வாய்வுத்துறை இன்றைய கொச்சித்துறைமுகத்திற்கு அருகில் உள்ள 'பட்டினம்' என்ற சிற்றூரில், அதாவது, மேற்குக் கடற்கரையில் இருந்த துறைமுகப் பட்டினங்களில் மிகவும் புகழ் பெற்ற துறைமுகப்பட்டினமாகத் திகழ்ந்த 'முசிறிப்பட்டினத்தில்' அகழ்வாய்வு நடத்தி வருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் இப்பட்டினத்தில் வியக்கத்தக்க செய்திகள்/ பொருட்கள் கிடைத்து வருகின்றன.

சங்க காலத் துறைமுகப் பட்டினங்களின் 'இன்றைய நிலையைக்' காண்பதற்கு முன் பண்டைத் தமிழகத்தின் உலகப்புகழ் பெற்ற துறைமுகப் பட்டினங்களான் "முசிறி" பற்றியும் 'போதவுகே' என்று யவனர்களால் குறிப்பிடப்பட்ட துறைமுகம் பற்றியும் சிறிது விரிவாகக் காண்போம்.

## "முழங்கு கடல் முழவின் முசிறி"

சங்க காலத்தில் கீழைக் கடற்கரையில் காவிரிப்பூம் பட்டினமும், மேலைக் கடற்கரையில் முசிறிப்பட்டினமும் உலகப் புகழ்பெற்ற துறைமுகங்களாகத் திகழ்ந்தன. மேற்குத் தொடர்ச்சி மலையின் பேரியாறு மேற்குக்கடலில் விழும் இடத்தில் இத்துறைமுகம் அமைந்திருந்தது. யவனர்கள் இத்துறைமுகப் பட்டினத்தை "மிசிறஸ்" என்று அழைத்தனர். வால்மீகி இராமாயணம் "முரசி பதனம்" என்று கூறுகின்றது. முசிறி வடமொழியில் முரசி ஆயிற்று. முசிறியில் விளைந்த முத்துக்களைச் சாணக்கியரின் 'அர்த்த சாத்திரம்' 'கௌர்ணெயம்' என்கிறது. பேரியாற்றுக்குச் 'சூர்ணியாறு' என்றும் பெயருண்டு. சூர்ணி, சௌர்ணெயம், கௌர்ணெயம்! சூர்ணியாற்றின் முகத்துவாரத்தில் விளைந்தமையால் இம்முத்துகளுக்கு 'கௌர்ணெயம்' என்ற பெயர் ஏற்பட்டது. முசிறிப் பட்டினத்தின் ஒரு பகுதியில் 'பந்தர்' என்னும் இடத்தில் முத்துக்களும், 'கொடுமணம்' என்னும் இடத்தில் பொன் நகைகளும் விற்கப்பட்டன எனப் பதிற்றுப்பத்து பகிர்கின்றது.

*'கொடுமணம் பட்ட வினைமாண் அருங்கலம்*
*பந்தர் பயந்த பலர் புகழ்முத்தம்"* (ப.பத்து 8ஆம் பத்து)

யவனர்கள் (கிரேக்கர்களும்,ரோமானியர்களும்) ஆரம்ப காலக் கட்டங்களில் அவர்களது கப்பல்களைக் கரையோரமாகவே செலுத்தி வந்து தமிழ் நாட்டை அடைந்தார்கள். இவ்வாறு வருவதற்குப் பல திங்கள்கள் ஆகும். கி.மு. முதல் நூற்றாண்டில் ஹிப்பலாஸ் என்னும் யவன மாலுமி, தென்மேற்குப் பருவக் காற்றின் உதவியால், நடுக்கடலில் கலம் செலுத்தி வந்து இந்தியாவை அடைய வழி கண்டுபிடித்தான். இப்பருவக் காற்றின் உதவியால் ஹிப்பலாஸ் தமிழ்நாட்டிற்கு வரக் கடல் வழியைக் கண்டு பிடித்ததால், அவனது பெயரான ஹிப்பலாஸையே இக்காற்றுக்குச் சூட்டினார்கள்.

யவனக்கப்பல்கள் பவழம், கண்ணாடி, செம்பு, தகரம், ஈயம் முதலிய பொருட்களை முசிறியில் இறக்குமதி செய்தன. தமிழ் நாட்டிலிருந்து ஏற்றுமதியான பொருட்களில் 'மிளகே' முதலிடம் பெற்றிருந்தது.

*"கள்ளியகம் பேர்யாற்று வெண்ணுறை கலங்க*
*யவனர் தந்தவினைமாண் நன்கலம்*
*பொன்னொடு வந்து கறியொடு பெயரும்*
*வளங் கெழு முசிறி"* (அகம் 149)

சங்ககாலத் தமிழ் நாட்டுடன் கிரேக்கர் வாணிகம் குறித்து, பிளினி பின்வருமாறு கூறுகிறார்.

"ஹிப்பலாஸ் என்றழைக்கப் பெறும் காற்றுடன் கடலோடிகள் சென்று நாற்பது நாட்களில் இந்தியாவின் முதல் வணிகக் களமான முசிறியை அடைகிறார்கள். இந்தத் துறைமுகத்தில் இறங்குவது நல்லதன்று. ஏனென்றால் இதனருகேயுள்ள 'நிட்ரியாஸ்' என்ற இடத்திலே கடற்கொள்ளைக்காரர்கள் தாவளமிட்டிருக்கிறார்கள். இங்கே வணிகச்சரக்குகளும் மிகுதி இல்லை. இவை தவிர, கப்பல்கள் நிற்குமிடம் கரையிலிருந்து நெடுந்தொலைவில் இருக்கிறது. படகுகளில் சரக்குகள் ஏற்றி, இறக்கிக் கொண்டு செல்லவேண்டும். நான் எழுதும் சமயத்தில் இப்பகுதியை ஆள்பவர் கெல போத்ராஸ் ஆவார்"

"இதனருகே இதைவிட இன்னும் வாய்ப்பான மற்றொரு துறைமுகம் உண்டு. 'நியாகுந்தி' என்ற நாட்டின் பகுதியில் அது அமைந்துள்ளது. அதுவே பராகே எனப்படும். இந்த நாட்டின் அரசன் பாண்டியன். அவன் இத்துறைமுகத்திலிருந்து நெடுந்தொலைவில் உள் நாட்டில் உள்ள மதுரை என்னும் இடத்தில் தங்கியுள்ளான். ஆனால் பராகே அருகில் உள்ள பகுதியின், பெயர் கொட்ட நாரா அல்லது குட்ட நாடு என்பது இங்கிருந்து ஒற்றை மரத்தில் குடைந்த படகுகளில் மிளகு பராகேக்குக் கொண்டுவரப்படுகிறது."

இது யவனர் வாணிகம் குறித்து பிளினியின் கூற்று. முசிறித்துறை முகத்திலிருந்து மிளகு கொண்டு செல்லப்பட்டதாலும், யவனர்கள் மிளகை

அதிகம் விரும்பி வாங்கியதாலும், மிளகு, முறையே 'மரிசி 'என்றும் 'யவனப்பிரியா ' என்றும் வழங்கப்பட்டது.

*பிளினி கூறும் செய்திகள் தொடர்பாக சில விளக்கங்கள் :*

1) சேரர், சேரலர், கேரலர், கேரளபுத்திரர், கெலபோத்ராஸ் சேரபுத்திரர் என்பதன் மரூஉ 'கெலபோத்ராஸ்' என்பது

2) முசிறிக்குத் தெற்கே இருந்த துறைமுகப்பட்டினம் வைக்கரை இதனைப் 'பராகே' என்கிறார் பிளினி.

3)நியாகுந்தி : இதனைத் தாலமி 'மேல்இந்த' என்றும், பெரிப்புளூஸ் என்னும் நூல் 'நெல்கிந்த' என்றும் கூறுகிறது. பிளினி இதனை 'நியாசிந்த' என்றும் கூறுகிறார். ஆனால் இதற்குத் தமிழில் என்ன பெயரென்று இப்பொழுது தெரியவில்லை. இது 'வைக்கரை'த் துறை முகத்திற்குத் தெற்கே இருந்தது.

4) மேலைக் கடற்பகுதிகளில் இருந்து 'குறும்பு' செய்து வந்த கடற் கொள்ளைக்காரர்களை, கடம்பர்களைக் கடற்போரில் வெற்றிகொண்டதாக

(அ) சேர வேந்தனான இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனை, மாமூலனார் அகம் 127, 347 பாடல்களிலும், குமட்டூர்க் கண்ணனார் பதிற்றுப்பத்திலும் (11,12,17)

(ஆ) 'கடல்பிறக் கோட்டிய வெல் குழு குட்டுவன்' 'பனித்துறைப் பரதவன்' எனச் சிறப்பித்துக் கூறப்படும் சேரன் செங்குட்டுவனைப் பரணர் பதிற்றுப்பத்து 41,46,48 ஆம் பத்து மற்றும் இளங்கோ அடிகள் சிலம்பு 30, கட்டுரை 12லும் மிக, மிக விரிவாகப் பாடியுள்ளார்கள்.

5) முசிறித்துறைமுகம் ஆழமில்லாமல் இருந்தமை பற்றியும், சிறிய தோணிகளில் சரக்கை ஏற்றிச் சென்று, நடுக்கடலில் உள்ள கலங்களில் சேர்த்துவிட்டு, அதற்குப் பதிலாக பொன்னைப் பெற்றுக் கொண்டது பற்றி பரணர் இவ்வாறு பாடுகின்றார்.

*'மனைக்குவைஇய கறிமூடையால்*
*கலிக்கம்மைய கரைகலக் குறுந்து*
*கலந்தந்த பொற்பரிசம்*
*கழித் தோணியாற் கரை சேர்க்குந்து*
............................
*முழங்கு கடல் முழவின் முசிறி'* (புறம் 343)

இவ்வளவு சீரும், சிறப்பும் பெற்ற முசிறித்துறைமுகப்பட்டினம் கி.பி. 1341ல் பெய்த பெருமழையின் காரணமாக (சுனாமி?) பேரியாற்றில் வெள்ளம் ஏற்பட்டு, வெள்ளத்தில் மூழ்கி மறைந்தது!

இவ்வாறு பல்வேறு சங்க இலக்கியங்கள் கூறும் வரலாற்றுச் செய்திகள், அயல் நாட்டு வணிகர்கள் குறிப்புகள், கல்வெட்டுச் செய்திகள், அகழ்வாய்வுத் துறையால் கண்டுபிடிக்கப்பெற்ற சங்ககாலப் பொருட்கள் முதலியன பல்வேறு நிலைகளிலும் ஒத்துப்போவதால், சங்க இலக்கியங்கள் பழந்தமிழ் நாட்டின் வரலாற்றைக் கூறும் ஆவணங்களே என்பதில் ஐயம் இருக்க முடியுமா?

## 'போதவுகே' (அரிக்கமேடு) காணாமல் போன மற்றொரு துறைமுகம் சங்கஇலக்கியங்கள் நேரிடையாகக் குறிப்பிடாத துறைமுகம்?

சங்க காலத்தின் அனைத்துத் துறைமுகப்பட்டினங்களையும் (குணகடல்-குடகடல் என்று அழைக்கப்பெற்ற கீழைக் கடற்கரை மற்றும் மேலைக் கடற்கரையில் இருந்தவை) பட்டியலிடுவது என்பது சங்கப்புலவர்களின் நோக்கமுமன்று; அவ்வாறு அவர்கள் பட்டியலிடவுமில்லை. அன்பின் ஐந்திணை பற்றிப் பாடிய எட்டுத்தொகை நூல்களிலும், மூவேந்தர்கள்/ குறுநில மன்னர்கள் போன்றோரைப் பாடிய பத்துப் பாட்டிலும், சங்கப்புலவர்கள் தாங்கள் பாடும் நாட்டைப்பற்றி அல்லது நிலத்தைப் பற்றி பாடும்பொழுது குறிப்பிடப்படுபவைகள்தாம் இந்தக் கிழக்குக்கடற்கரை மற்றும் மேற்குக் கடற்கரைத் துறைமுகப் பட்டினங்கள் மற்றும் அவற்றைப் பற்றிய செய்திகள். அவைகள் பாடும் பொருளோடு இணைந்த செய்திகளே தவிர வலிந்து புகுத்தப்பட்டவை அல்ல! இயற்கையாக இணைந்தவை அவை! எனவே சங்க காலத் தமிழ் நாட்டின் அனைத்துத் துறைமுகப்பட்டினங்களைப் பற்றிய செய்திகள் அனைத்தும் இப்பாடல்களில் இடம் பெற்றிருக்கும் வாய்ப்புகள் இல்லை. சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் துறைமுகப் பட்டினங்களேயல்லாது, மேலும் எத்தனையோ துறைமுகப் பட்டினங்கள் இருந்து, அழிந்து போயிருக்கலாம். அவைகளைப் பற்றி எல்லாம் நாம் அறிவதற்கு போதுமான சான்றுகள் இப்பொழுது நம்மிடையே கிடையா! ஒருவேளை, இன்னும் முனைப்பாக இந்திய அரசின் அகழ்வாராய்ச்சித்துறை செயல்படவேண்டுமென்று வற்புறுத்தக்கூடிய ஆற்றலை நம் தமிழகத்து அரசியல்வாதிகள் அனைவரும் தமது ஒற்றுமை மூலம் பெற்றால் (இது நடக்கக்கூடியதா?) ஒருவேளை இந்திய அரசு முழுமையான அகழ்வாய்வினை தமிழ்நாட்டில் நடத்த முன்வரலாம்! அப்பொழுது நாம் இன்னும் அதிகமான செய்திகளைப் பெறமுடியும்! போதவுகே என்னும் துறைமுகப் பட்டினம் குறித்து சங்க இலக்கியங்கள் நேரடியாக குறிப்பிடவில்லை. ஆனால் இத்துறைமுகம் எயிற் பட்டினத்திற்குத் தெற்கே

இருந்திருக்கிறது. புதுச்சேரிக்கு அருகில் இருந்த இத்துறைமுகப் பட்டினத்திற்குச் சங்ககாலத்தில் என்ன பெயர் என்பது தெரியவில்லை. இப்பொழுது இதனை 'அரிக்கமேடு' என்கிறார்கள்.

'பெரிப்ளூஸ்' என்னும் யவனநூல் தமிழ் நாட்டின் கிழக்குக்கரையில் காமராவிற்கு (காவிரிப்பூம்பட்டினம்) வடக்கே 60 மைல் தொலைவில் 'போதவுகே' என்னும் பட்டினத்தைக் குறிக்கின்றது. உரோமப் பேரரசை ஆட்சி செய்த அகஸ்தஸ் (கி.மு 23-கி.பி 14) காலத்தில் ரோமபுரிக்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே கடல்வாணிகம் விரிவுபடுத்தப்பட்டது. அப்பொழுது போதவுகே என்னும் பட்டினத்தில் யவனர்களின் பண்டகசாலை இருந்திருக்க வேண்டும். கடைச்சங்க காலத்தில் இத்துறைமுகம் சிறப்பாகச் செயல்பட்டு இருக்க வேண்டும்.

1945ல் அரிக்கமேட்டில் அகழ்வாய்வுத்துறையால் 'ஆய்வு' மேற்கொண்ட பொழுது, அங்கே கிடைத்த பல பொருள்களிலிருந்து கி.பி. முதலாம் நூற்றாண்டில் போதவுகே (அரிக்கமேடு) யவனர்களின் பண்டகசாலையாக இருந்திருக்க வேண்டுமெனத் தெரியவருகின்றது. கி.பி. முதல் நூற்றாண்டில் செய்யப்பட்டு தமிழ்நாட்டிற்குக் கொண்டு வரப்பட்ட பாண்டங்களும் 'அம்போரெ' என்னும் 'மது' வைக்கும் குடுவைகளும் இங்கு கண்டெடுக்கப்பட்டன. அக்காலத்து மன்னர்கள் யவனர்கள் கொண்டுவந்த மதுபானத்தை அருந்தினார்கள் என்பதை நக்கீரர் வாக்கு நமக்கு தெரிவிக்கின்றது.

*'யவனர் நன்கலம் தந்த தண் கமழ்தேறல்*
*பொன்செய் புனை கலத் தேத்தி நாளும்*
*ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து*
*ஆங்கினி தொழுகு மதி ஓங்குவாள் மாற''* (புறம் 56)

சிவப்புக் களிமண்ணால் செய்யப்பட்ட யவன விளக்கின் உடைந்த துண்டுகளும் அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்டன. இதையும் நக்கீரரே கூறுகின்றார், கேளுங்கள்!

*'யவனர் இயற்றிய வினைமான் பாவை*
*கையேந்தையகல் நிறைய நெய்சொரிந்து*
*பரூஉத்திரி கொளீய குரூஉத்தலை நிமிர் எரி.'*

(நெடுநல் வாடை)

மேலும் அரிக்கமேடு அகழ்வாய்வில் கிடைத்த மட்பாண்டச் சில்லுகளில் பொறிக்கப்பட்டிருந்த தமிழி/ பிராமி எழுத்துக்கள் கி.பி.முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும்!

எனவே, சங்க இலக்கியங்கள் இந்தப் 'போதவுகே' துறைமுகம் பற்றி நேரடியாகப் பேசவில்லையாயினும், பெரிப்ளூஸ் நூலில் உள்ள குறிப்புகள், அகழ்வாய்வில் கிடைத்த பொருட்கள், மற்றும் அக்காலத்திய தமிழ் / பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பெற்ற மட்பாண்டச் சில்லுகள் முதலியவற்றால், இத்துறைமுகம் பற்றி நாம் அறிகின்றோம். ஆனால்.... , துறைமுகத்தின் சங்ககாலப் பெயர் என்ன என்பதை நாம் அறிவது எப்பொழுது? இத்துறைமுகம் பற்றி மேலும் அறிய விரும்புவோர் ""Arikomedu: An Indo-Roman Trading Station on the eastcoast of India pp 17-124 Ancient India Number 2 July" 46ல் கண்டுகொள்க!

## சங்க காலத்துத் துறைமுகப் பட்டினங்களின் இன்றைய நிலை!

பண்டைத் தமிழ் நாட்டின் கீழைக் கடற்கரையில் கொல்லந்துறை, எயிற்பட்டினம், அரிக்கமேடு, காவிரிப்பூம்பட்டினம், தொண்டி, மருங்கூர்ப்பட்டினம், கொற்கை, குமரித்துறையும், மேலைக்கடற்கரையில் மங்களூர், நறவு, தொண்டி, பரக்கெ, நீல்கண்ட, மாந்தை, முசிறி, வைக்கரை, மேல்கிந்த, விழிஞம் ஆகிய துறைமுகப் பட்டினங்களும் இருந்தன என்று இலக்கியம், வரலாற்றுக் குறிப்புகள், பயணக் கட்டுரைகள், அகழ்வாய்வுச் சான்றுகள் போன்ற பல்வேறு சான்றுகள் மூலமாக அறிகின்றோம். ஆனால்.... அந்தோ!

பண்டைத் தமிழ்நாட்டின் பொற்காலமாகத் திகழ்ந்த சங்க காலத்தைப் பற்றி இறுமாப்புடன் கனவுலகில் இருந்த நாம், இத்துறைமுகங்களின் இன்றைய நிலைகண்டு கண்ணீர் உகுக்கின்றோம்; நமது நெஞ்சங்களில் செந்நீர் வடிகின்றது!

1935ல் சென்னைப் பல்கலைக்கழகத்தில், மொகஞ்சாதரோ அகழ்வாராய்ச்சியாளர்களில் ஒருவரான திரு.கே.என். தீட்சித் அவர்கள் சர். வில்லியம் மேயர் அறக்கட்டளை சார்பில் ''சிந்துவெளி நாகரீகம்'' குறித்து ஆய்வுரை ஆற்றினார். அப்பொழுது அவர், 'சிந்துவெளி நாகரீகத்தில் பரவலாகச் சங்கு பயன்படுத்தப்பட்டது. சங்கு தென்பாண்டி நாட்டிலிருந்து பெறப்பட்டதாகத் தோன்றுகிறது. திருநெல்வேலியில் கொற்கை போன்ற துறைமுகப் பட்டினங்களில் அகழ்வாய்வு செய்தால் சிந்துவெளி நாகரீகத்தின் எச்சங்கள் தமிழ் நாட்டிலும் கிடைக்க வாய்ப்புள்ளது' என்று பகர்ந்தார். நூற்றுக் கணக்கான ஏக்கர் தொல்பொருள் எச்சங்களைக் கொண்ட ஆதிச்ச நல்லூர் போன்ற இடங்களைத் தொல்லியல் துறையினர் கண்டு கொள்வதே இல்லை. அரசியலார்க்கும் இவற்றில் ஆர்வம் இல்லை. இந்நிலை இன்று வரை தொடர்கிறது. ('சிந்து வெளித் தொல் தமிழ் நாகரிகம் ! பக்கம் 100 கழக வெளியீடு)

இந்திய அரசாங்கம் தேவையான நிதி உதவியை இவ்வகையான ஆராய்ச்சிகளுக்கு ஒதுக்குவதே இல்லை. சான்றாக... இந்திய அரசின் அகழ்வாய்வுத்துறையினர் முனைப்பான, முழுமையான ஆய்வுகளைக்

காவிரிப்பூம் பட்டினத்தில் மேற்கொள்ளாத நிலையில், இங்கிலாந்தைச் சேர்ந்த அகழ்வாராய்ச்சி நிபுணர் திரு. கிரகாம் ஆன்காக் என்பவர் பல்வேறு தனிப்பட்ட அமைப்புகளிடம் உதவிபெற்று, இந்திய அரசின் அனுமதியுடன் காவிரிப்பூம் பட்டினத்தில் அகழ்வாராய்ச்சி மேற்கொண்டார். அதன் விளைவாக

1) பூம்புகார் கடற்பகுதியில் குறுக்கும் நெடுக்குமாக நீண்ட அகலமான தெருக்களுடன், உறுதியாக கற்களால் கட்டப்பட்ட கட்டிடங்கள் இடிபாடுகளுடன் கூடிய ஒரு பெரிய நகரமே நீரில் மூழ்கியிருப்பதைச் 'சைடுஸ்கேன் சோனார்' என்ற கருவி துல்லியமாகக் காட்டியது. இந்நகரம் சுமார் 75 அடி ஆழத்தில் புதையுண்டு கிடப்பதைக் கண்டறிந்தார்.

2) இந்நகரம் சுமார் 11 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கடலில் மூழ்கி இருக்கவேண்டும் என்று கருதுகிறார்.

3) இப்பூம்புகார் நகர நாகரீகம் சுமேரியா, அரப்பா, மொகஞ்சதாரோ போன்ற நகர நாகரிகளுக்கு மிகவும் மேம்பட்டது மற்றும் பழமையானது என்றும் தெரிவிக்கிறார்.

வியக்கத்தக்க இந்த அகழ்வாராய்ச்சியை பூம்புகார், குமரி மற்றும் மற்ற துறைமுகப் பட்டினங்களிலும் இந்திய அரசாங்கம் முனைப்பாக, முழுமையாக மேற்கொண்டால், உலகின் முதல் நாகரீகம் தமிழன் நாகரீகமே என்பதும், உலகின் முதன்மொழி தமிழே என்பதும் ஐயத்திற்கு சிறிதும் இடமின்றி உறுதிசெய்யப்படும்.

**செம்மொழிக் குழுவின் தலைவரும், தமிழக முதல்வருமான முத்தமிழ் அறிஞர். டாக்டர். கலைஞர் அவர்கட்கு வேண்டுகோள்!**

கோவையில் நடைபெறவிருக்கும் உலகத்தமிழ்- செம்மொழி மாநாட்டில், முதல்வர். கலைஞர் அவர்களே இந்திய அரசிற்கு வேண்டுகோள் விடுத்து ஓர் தீர்மானம் முன்மொழிய வேண்டும்.

1) சங்க காலத் துறைமுகப் பட்டினங்களில் அகழ்வாய்வு செய்வதற்காக உடனடியாக இந்திய அரசாங்கம் ரூபாய்.10,000 கோடி ஒதுக்க வேண்டும்.

2) இதன் தொடர்ச்சியாக ஐ.நா.சபை, மற்றும் வளர்ந்த நாடுகளின் உதவியை இந்திய அரசு கோரிப் பெறவேண்டும்.

3) மாநாட்டில் கலந்து கொள்ளும் ஐ.மு. கூட்டணிக் கட்சிகளின் தலைவி. திருமதி. சோனியா காந்தி அம்மையாரிடமும், தலைமை அமைச்சர் மன்மோகன் சிங் அவர்களிடமும் இதற்கான ஒப்புதலை மாநாட்டு அரங்கத்திலேயே பெற வேண்டும்.

*இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காத தமிழ் வாழ்க?*

# தமிழ் ஓர் உயர் தனிச்செம்மொழி

தோ.சி. தங்கபாண்டியன்

உலகின் மிக மூத்த மொழிகளாக அறியப்படும் கிரேக்க மொழி, சீனமொழி, இலத்தின் மொழி, எபிரேயம், சமஸ்கிருதம், ஹீப்ரு ஆகிய மொழிகளில் தமிழும் முதன்மையான இடம் பெற்றுத் திகழ்வதனை மொழி அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். விடுதலைக் கவிஞர் பாரதியாரும், "சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே - அதைத் தொழுது படித்திடடி பாப்பா (ப249) எனப் பாடியுள்ளார். தமிழின் செம்மாந்த தன்மைகளை இலாஹோவரி, கால்டுவெல், ஹல்பார்ட், பரிதிமாற்கலைஞர், பொற்கோ, நா. மகாலிங்கம், க.ப. அறவாணன், பாவாணர், தனி நாயகம், அகஸ்திய லிங்கம், போன்றோர் விரிவாகப் பல நூல்களில் கூறியுள்ளனர். குறுகிய அரசியல் நோக்கம் கொண்ட சிலர் தமிழைக் குறைத்து மதிப்பிடுகின்றனர். இருப்பினும் பல சான்றுகளால் தமிழ் உயர் தனிச் செம்மொழியாவதை உணரலாம்.

## செம்மொழித் தகுதிகள்

தொன்மை, தனித்தன்மை, பொதுமைப் பண்பு, பலமொழிகளுக்குத் தாயாகி நிற்றல், இனத்தின் பண்பாடு மற்றும் நாகரிகத்தின் வெளிப்பாடாகத் திகழ்தல், பிறமொழி உதவியின்றி தனித்து இயங்கும் ஆற்றல், இலக்கிய, இலக்கண வளம், மொழிக் கொள்கை ஆகியன ஒரு மொழியைச் செம்மொழி என அறிய உதவும் தகுதிகளாக அறிஞர் கூறும் இவையும் இவற்றுக்கு மேலும் பல உயர்ந்த தகுதிகளைத் தமிழும் தமிழரும் பெற்றிருப்பதை அறியலாம்.

## தமிழின் பழமை:

ஆரியர் வருகைக்கு முன் அதாவது கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முன்பே பேச்சும் எழுத்தும் கொண்ட தனித்தியங்க வல்ல மொழியாகத் தமிழ் விளங்கியமைக்குத் தக்க தொல்லியல் சான்றுகள் உள்ளன. ஆரியர் வருகைக்கு முன் இந்தியாவில், வட இந்தியாவில் வழங்கிய மொழி தமிழ் என்பதில் எனக்கும் சிறிது கூட சந்தேகமில்லை' என எம்.டி. பண்டார்க்கர் கூறுவதாகவும்,

தற்கால இந்தியா முழுமையும் வழங்கிய மொழி தமிழ்: சமஸ்கிருத, சம்பந்தமான மொழிகள் வழங்கவில்லை. இவ்வுண்மையை பி.தி. சீனிவாச

ஐயங்கார், "இந்தியாவின் கற்காலம்" என்னும், நூலில் விளக்கியுள்ளார் எனவும், ந.சி. கந்தையா என்னும் தமிழறிஞர் கூறுவது தமிழின் பழமையை உணர்த்துவதாக உள்ளது (பக்கம் 20-21)

"கி.மு.50,000 ஆண்டுகள் ஒட்டிச் செம்மையான தமிழ் இருந்து வந்திருக்கிறது" (ப.11 தமிழும் மொழிகளும்) 'உலகில் உள்ள மொழிகள் 2700 ஆகும். இவற்றில் இலக்கண இலக்கியம் கொண்டவை 700 மொழிகளுக்கு மேல் தேறாது. சொந்த எழுத்துக்களைக் கொண்ட மொழி என்றால் எண்ணிக்கை 500க்கு கீழ் வந்துவிடும். இந்நிலையில் தொன்மையான மொழி என்ற வகையில் தமிழ், சமஸ்கிருதம், சீனம், இலத்தீன், கிரேக்கம் என்ற ஐந்து மொழிகளைச் சொல்வர். வேறு சிலரோ ஹீப்ரு மொழியைச் சேர்த்து 6 மொழி என்பர். ஆனால் இவற்றில் சமஸ்கிருதத்திற்கு இன்றளவும் எழுத்தில்லை. எழுத்தில்லாத மொழி எங்ஙனம் இலக்கியம் படைக்கும்? எங்ஙனம் இலக்கணம் உருவாக்கும்? எனவே என்றுமே பேசப்படவில்லை என்பதால் முதன்மைப் போட்டிக்குத் தகுதியற்றதாகிவிடுகிறது. சீனமொழி எழுத்துக்காலத்திலேயே நின்றுவிட்டது. இலத்தின், கிரேக்கம், ஹீப்ரு ஆகிய மூன்று மொழிகளும் பேச்சு வழக்கிலிருந்து வீழ்ந்து விட்டன. இந்நிலையில் தொன்மைப் போட்டிக்கு மிக வன்மையுடன் நிற்பது தமிழ் மொழி மட்டுமே யாகும்' (ப 33 தமிழும் உலக மொழிகளும்) என சாத்தூர் சேகரன் அவர்கள் குறிப்பிடுவது ஈண்டு எண்ணிப் பார்க்கத் தக்கதாகும்.

மேலும் அவர் "நாம் கேள்விப்பட்ட தமிழின் வயது 5000-3000 ஆண்டுகள். ஆனால் உண்மைத் தமிழின் வயது இலட்சம் ஆண்டுகளாகும்" என்பதால் ஆயிரக்கணக்கான மொழிகள் உலகில் தோன்றும் முன்பே தமிழ் பேச்சும் எழுத்தும் கொண்ட செம்மையான மொழியாக இருந்துள்ளமை அறியலாகும்.

### தமிழின் உலகளாவிய சிறப்பும் நிலைப்பும் :

உலகின் பல்வேறு நாடுகளின் ஊர்ப் பெயர்களும், மக்கட் பெயர்களும், பேச்சு மொழிப் பெயர்களும், வினையடிச் சொற்களும் தமிழின் தொன்மையான வடிவங்களாக உள்ளன. சில அப்படியே வழங்குகின்றன. சில சிதைந்து வழங்குகின்றன என்பதை பல சான்றுகளால் மானுடவியல் அறிஞர்களும், மொழி அறிஞர்களும் உறுதிப்படுத்துகின்றனர். உலகின் அனைத்து நாகரிகங்களும் தமிழ் மொழியுடனும், தமிழ்ப் பண்பாட்டு மூலங்களுடனும், மிக நெருங்கிய தொடர்பினைப் பெற்றுள்ளன. அனைத்து

நாகரிகங்களும் (கடல் கொண்ட) குமரிக்கண்ட நாகரிகத்துக்குப் பிந்தியவை என சாத்தூர் சேகரன் குறிப்பிடுகின்றார்.

ஆஸ்திரேலியா, ஆசியா, ஆப்ரிக்கா, மத்திய தரைக்கடல் நாடுகள், அரேபியா முதலிய நாடுகளின் மக்கள் யாவரும் குமரிக்கண்ட திராவிட மக்களின் வாரிசுகளே! இதனாலேயே கணியன் பூங்குன்றனார் தம் புறநானூற்றுப் பாடலில் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்றார் போலும்!

## பிறமொழிகளில் தமிழின் செல்வாக்கு :

இன்றைய உலக மொழிகள் பலவற்றில், குறிப்பாகச் சீன மொழியில், நீ என்பது அப்படியே நீ என்றும், தாம் என்பது தாமன் என்றும் தாய் என்பது தாயி எனவும், ஜப்பான் மொழியில் அணை என்பது அன எனவும், தழை என்பது தரு உணவும், கூவல் என்பது கூபொ எனவும், இராக் மொழியில் தமிழில் யாமம்-யோம் எனவும், நாள் என்பது நஹார் எனவும், அரபு மொழியில் தமிழின் அம்மா - உம்ம, எனவும், அப்பா ஆயி எனவும், கூழ்-கூட எனவும் மலாய் மொழியில் தமிழின் முதியவன் முதுவ எனவும், பகல்-பகி எனவும், பூ-பூங்க எனவும், கப்பல்-கெப்பல் எனவும் வழங்குகிறது.

"ஹீப்ரு மொழியில் தமிழின் ஊர் என்பது அப்படியே ஊர் எனவும் இரு என்பது இர் எனவும், அப்பா என்பது அபா எனவும், அம்மா என்பது- எம்மா எனவும், இன்னும் பாரசீக மொழியில் அப்பு(தண்ணீர்)-அப் எனவும், அடுப்பு-அடெப் எனவும், ஆறு-அர்ரெ எனவும், அங்கு என்பது அஞ்ச எனவும், வழங்கப்படுவதாகவும், இதுமட்டுமல்லாமல் திபெத்தியன், நேப்பாளி, உருது, கிரேக்கம், லத்தீன், வங்க மொழி முதலியவற்றில் தமிழ்ச் சொற்கள் சற்றுத் திரிந்த நிலையில் உள்ளன" என்பதை சாத்தூர் சேகரன் தம் தமிழும் உலக மொழிகளும் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார் (பக்கம் 15-25)

லாகோவரி என்னும் மொழியறிஞர் 700க்கும் மேற்பட்ட சான்றுகளைக் காட்டி உலக மொழிகளில் தமிழ் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கலந்து வழங்குவதைக் காட்டுகின்றார்.

"தமிழுக்கும் சீன மொழிக்கும் தொடர்பு உண்டென்று சொல்லப் படுகிறது, எபிரேயம், கிரேக்கம், சமஸ்கிருதம் முதலிய மொழிகளில் தமிழ்ப்பதங்கள் காணப்படுகின்றன. பழைய ஜெர்மன் காதிக், லாத்தின் முதலிய மொழிகளிலுள்ள சொற்கள் தமிழடியாகப் பிறந்துள்ளன. சுமேரிய மொழிக்கும், தமிழுக்கும் பழைய தொடர்பு காணப்படுகின்றன.

பின்லாண்டில் வழங்கும் மொழியில் அனேகம் தமிழ் சொற்கள் காணப்படுகின்றன எனத் "தமிழர் சரித்திரம்" என்ற நூலில் ந.சி. சந்தையா கூறுவது (ஞா.21-22) தமிழின் உலகளாவிய செல்வாக்கினைக் காட்டுகிறது.

தமிழ் ஓர் உயர்தனிச் செம்மொழி:

தமிழ் பல்வேறு சிறப்புகளையும், தகுதிகளையும், நெடிய, பழைய வரலாற்றுப் பாரம்பரியத்தையும் உடையது. தானும் வளர்ந்து தன் சேய் மொழிகளையும் வளர்த்துள்ளது. தன்னுள் பல்துறை வளர்ச்சி கண்ட சிறப்பினது. இதனை "நன்னூல் என்னும் பின்னூல் கொண்ட உயர்தனிச் செம்மொழி எனக் கால்டுவெல்லார் தமிழ் மொழியை மதிப்பிட்டார் எனின் அவர் தொல்காப்பியத்தைக் கற்க வாய்த்திருந்தால் "உலக முதன்மொழி தமிழே' என உறுதிபட நிறுவியிருப்பார் அல்லரோ?" என இளங்குமரனார் கூறுவது போல், தமிழ் தனிச் செம்மொழியாவது இன்று மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது.

பல்லாயிரம் ஆண்டுகளாக வழங்கப்படும் இலக்கிய இலக்கணப் பரப்பு, கையாள்வதற்கேற்ற எளிமை, மதுரத்தன்மை, நெகிழ்வும் செப்பமும் உடைய போக்கு உலகின் எல்லா நாடுகளிலும் பரவிக் காணப்படும் தன்மை இவற்றை வைத்து நோக்கும் போது தமிழ் ஓர் உயர் தனிச் செம்மொழி என்பதும், பல ஊழிக்காலங்களைச் சந்தித்தும் அழியாத் தன்மையுள்ள தெய்வப் பெற்றி உடையது என்பதும், இதனால் உணர முடிகிறது.

## நிறைவுரை:

''முன்னைப் பழைமைக்கும், பழைமையாய்ப் பின்னைப் புதுமைக்கும், புதுமையாய்ச்'' சீரிளமைத்தன்மையும், செழித்த பல்துறை வளமும் உடையது தமிழ் ஆகும். தமிழில் என்ன இல்லை? அனைத்துத் துறைகளும் சார்ந்த நூல்கள் கடந்த 100 ஆண்டுக்கால எல்லையில் தமிழில் கனிந்து மணம் வீசுகின்றன. கடல் கொண்ட நூல்களும் இப்போது கிடைக்கும் எனில் உலகே வியக்கும் ஒப்பற்ற மொழியாக மேலும் ஒளி வீசும் பேச்சு, எழுத்து, இசை, ஓவியம், அறிவியல், தெய்வத்தன்மை, வரலாற்றுத் தொன்மை கலை நேர்த்தி, ஆகிய எண்ணற்ற தகுதிகளை உடைய தமிழ் "ஓர் உயர்தனிச் செம்மொழியே'' என்பதில் யாவர்க்கும் ஐயமில்லை! இம்மொழியை மேன்மேலும் வளப்படுத்தி மகிழ்வது தமிழர்தம் இன்றியமையாக் கடமையாகும்.

# 'கவிக்கோ' அப்துல் ரகுமானின் ' தொலைப்பேசிக் கண்ணீர்', 'பால்வீதி' ஆகிய கவிதை நூல்களில் காணலாகும் உள்ளடக்கூறுகள் ஓர் ஆய்வு!

*த. செந்தமிழ்ச் செல்வன் எம்.ஏ., எம்.பில்.*
முனைவர் பட்ட ஆய்வாளர்

**முன்னுரை:**

கவிக்கோ அப்துல் ரகுமான் சிறந்த கவிஞர், பழைமையும், புதுமையும் கற்றறிந்து துய்த்து அதில் புதிய பரிமாணங்களைக் காண்பவர். தமிழ் கூறும் நல்லுலகத்து மைந்தர் என்றால் மிகையாகாது; தனது சிறப்பு மிக்க கவிதைகளால் தனித்துவம் பெற்றவர்; ஒவ்வொரு கவிதை வாயாலும் சிறப்பாக உச்சரிக்கப்படும் பெயர் கவிக்கோ! பல பரிசுகள் பெற்றவர்; பல பல்கலைக்கழகங்களில் இவரது கவிதை நூல்கள் பாடமாக வைக்கப்பட்டுள்ளன. மேலும் இவரது கவிதைகள் தொடர்பாகப் பல ஆய்வு நூல்கள் வந்துள்ளன.

தமிழகம் மட்டுமல்லாது அயல்நாட்டு தமிழர்களும் விரும்பும் பெருமைக்குரியவர் கவிக்கோ. கவிதைக்காக தன்னுடைய கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் பணியைத் துறந்தவர். புதுக்கவிதை எழுதத் துடிக்கும் பல இளைஞர்களை ஊக்கப்படுத்தும் பெருமைக்குரியவர்.

இவரது 'தொலைப்பேசிக் கண்ணீர்' என்னும் நூல் ஒரு கவிதை நூல்; கவிதை, புதுக்கவிதைப் பற்றிய பல பரிமாணங்களைக் காட்டுகின்ற கட்டுரைகள் அடங்கிய நூல். அடுத்து இவரது ஒரு கவிதை நூல் 'பால்வீதி'. இவர் கவிதை உலகிற்கு அறிமுகமாக துணை நின்ற நூல். கவிக்கோவுக்கு 'மீமெய்மையியல்', 'சர்ரியலிஸம்' என்னும் புதிய பரிமாணங்களுக்கு அழைத்துச் சென்ற நூல். தனது ஆழ்மனக் கடலில் உள்ள முத்துக்களை

கற்பனை என்னும் பெருங்கடலில் மூழ்கி வெளியே கொணர்ந்தவர். அந்த முத்துக் குவியல் தான் 'பால்வீதி'.

**'மீமெய்ம்மையியல்' என்பது என்ன?**

தானியங்கி எழுத்து
விநோதத் சொற்சேர்க்கை.
தியான நிலையில் தாமே உதிக்கும் படிமங்கள்.குறியீடுகள்.

கவிக்கோ மீமெய்மையியலின் பல்வேறு சாத்தியக்கூறுகளையும் பரிசோதித்து பார்த்துள்ளார். கவிக்கோ அப்துல் ரகுமானின் கவிதை மேல் உள்ள பற்றை, சிறப்பை வெளிக்கொணர்வதற்காக இவ்வாய்வுக் கட்டுரையை எழுதத்துணிகின்றேன். அதற்கு மூலமாக 'தொலைப்பேசிக் கண்ணீர்', 'பால்வீதி' என்னும் அவரது கவிதை நூல்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

## தொலைப்பேசிக் கண்ணீர்-உள்ளடக்கக் கூறுகள்

இந்நூலின் கட்டுரைகள் புதுக்கவிதையின் பண்புகளையும், பரிமாணங்களையும் காட்டுவன. ஆய்வுக்காக தொகுத்தபோது கீழ்க்காணும் தலைப்புகளில் மட்டும் கருத்துக்கள் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அவையாவன

***சங்க இலக்கியத்தில் காணலாகும் புதுக்கவிதைக் கூறுகள்***

***புதுக்கவிதையின் ஊற்று பைபிள்***

***இந்திய, அயல்நாட்டுக் கவிஞர்களும் புதுக்கவிதையின் இயல்புகளும்***

***கடுமுனைப்பியம் (Ultraism) படைப்பியம் அறிமுகம் (Creationism)***

## சங்க இலக்கியத்தில் காணலாகும் புதுக்கவிதைக் கூறுகள்:

தமிழ் மொழியின் தொன்மைக்கும் சிறப்புக்கும் சான்றுகளாய் திகழ்வன சங்க இலக்கியமாகும். மனித வாழ்வின் இரு கண்களாக விளங்கிய அகம், புறம் என்ற தளங்களை விரிவாக ஆராய்ந்தது. சங்க இலக்கியத்தின் பாடுபொருள் அகம், புறமெனப் பிரிந்து நின்றாலும் அவை பல்வேறு

உட்கூறுகளையும், உவமைகளையும், சிறப்புத்தன்மைகளையும் கொண்டுள்ளது. புதிய இலக்கிய வகைகளுக்கும், வடிவங்களுக்கும் வழியாக அமைந்துள்ளது.

## புதுமை என்பது என்ன?

*''படைப்பு என்றாலே புதுமை என்றுதான்*
*பொருள். மொழி பழையதுதான். ஆனால்*
*ஒவ்வொரு படைப்பும் புத்துயிர்ப்பைக் கொண்டு வருகிறது*
*மொழி புதிய படைப்பைச் சுவாசிப்பதால்*
*உயிர் வாழ்கிறது.''*
என்று விளக்கம் தருகிறார் கவிக்கோ!

*''விருந்தே தானும்*
*புதுவது கிளந்த யாப்பின் மேற்றே''*

என்னும் தொல்காப்பிய நூற்பாவை உதாரணம் காட்டி, புதிய வடிவில் சொல்வது ''விருந்து'' என்பதன் பொருளாகும் என புதிய விளக்கம் தருகின்றார்.

படைப்பாளன் ஒருவன் பழைய பொருளையும் புதிய கோணத்தில் பார்ப்பான். அதனால், அப்பொருளின் புதிய பரிமாணம் தோன்றும்; அது புதுத்தன்மை பெற்று விடுகிறது.

*''நிலன் நாவில் திருதரூஉம்*
*நீள் மாடக் கூடலார்*
*புலன் நாவில் பிறந்த சொல்*
*புதிது உண்ணும் பொழுதன்றோ?*
*...............*
*நமக்கு அவர்*
*வருதும் என்று உரைத்ததை''*

(பாலைக்கலி 34)

இது கலித்தொகைப் பாடல்,

காதலன் கடமை ஆற்றப் பிரிந்து சென்ற போது இளவேனிற் காலம் வருவேன் என்றவன் இளவேனிற் காலம் வந்தும் வரவில்லை. காதலி புலம்புகிறாள்.

பழங்காலத்தில் கவிஞர்கள் புலவர்கள் என்பட்டனர். புலவன் என்ற சொல் புலன் என்ற சொல்லிலிருந்து தோன்றியது. இளவேனிற்காலத்தில் பூ மலரும். அக்காலத்தில் தான் கவிஞர்கள் நாவிலும் புதிய பூக்கள் மலரும் அவைதான் கவிதைகள்!

''எனக்காக வராவிட்டாலும் இந்தப் புதுக்கவிதைகளைச் சுவைக்கவாவது வந்திருக்க வேண்டாமா காதலன்?'நானும்' ஒரு புதுக்கவிதைதானே?''

என்று காதலி ஏங்குவதாக கவிக்கோ புதிய விளக்கம் தருகின்றார்.

## புதுக்கவிதையின் ஊற்று பைபிள்:

''எப்போதும் இளமையோடு இருக்கும் இலக்கியங்களில் பைபிளும் ஒன்று. உலகப் பேரிலக்கியங்களில் உன்னதமான இடம் அதற்கு உண்டு'' எத்தனையோ கவிஞர்கள் தங்கள் கவிதை ஊற்றுக்கு பைபிளை கருவியாகப் பயன் படுத்தியிருக்கிறார்கள். வசனக் கவிதையின் தந்தை எனக் கூறப்படும் வால்ட் விட்மன், ஜெர்மானிய புதுக்கவிஞர் பெர்டோல்ட் ப்ரக்ட் போன்றோர்க்குப் பைபிள் தூண்டல் விளக்கமாக இருந்தது.

*''புதியதைச் சொல்ல வேண்டும்; பழையதைச்*
*சொல்லநேரிட்டால் புதுமையாகச் சொல்ல*
*வேண்டும் என்பது புதுக்கவிதையின்*
*இலக்கணம்''*
என்கிறார் கவிக்கோ.

புதுமையான இளமையான சொற்கள் நிரம்பியது பைபிள். பழங்காலம் நவீனகாலம் இரண்டுக்கும் மகாகவிதை பைபிள் என்கிறார் டென்னிசன். வாழ்வின் சாதாரண நிகழ்வுகளைப் பேசுகிற வார்த்தைகளின் புகுந்து புதுமையாக்குகிறது. நீண்ட ஆண்டுகளுக்கு முன் தோன்றிய பைபிளின் சொற்கள் இன்னமும் கவித்துவம் நிறைந்து காலத்தைக் கடந்து வாழ்கின்றன. படைப்பாளிகளின் கருப்பையாக பைபிள் இருக்கிறது. ஒவ்வொரு படைப்பாளியும் பைபிளை உள் வாங்க வேண்டும் என்பது கவிக்கோவின் எண்ணமாகும்.

## இந்திய அயல்நாட்டுக் கவிஞர்களும், புதுக்கவிதையின் இயல்புகளும்

"மனித மனம் கம்ப்யூட்டர் போன்றது. நாம் கண்ணால் பார்க்கும் பொருள்களை அது வகை பிரித்து அடுக்கி வைக்கிறது. ஒரு மாதிரி இருக்கும் பொருள்களை அது ஒரே இடத்தில் அடுக்கி வைக்கிறது. அதனால்தான் நாம் ஒரு பொருளைப் பார்த்ததும் அதைப் போன்ற பொருள்கள் நம் நினைவுக்கு வருகின்றன."

கவிஞர்களுக்கு மனத்தின் இந்தச் செயல் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. இதனால்தான் கவிஞர்கள் உவமை, உருவகம், படிமம், குறியீடு ஆகியவற்றை எளிதாக உருவாக்க முடிகிறது.

ஒருநாள் இரவு முழுதும் வீசிய சூறாவளியால் ஏற்பட்ட மணற்குவியலை ஜப்பான் நாட்டுக் கவிஞர் இஷிகாவா பார்க்கிறார்; அவர் மனது பார்க்கிறது. உயர்ந்து மணற்குவியல் அதைப்போன்ற வேறொன்று அவருக்கு நினைவுக்கு வருகின்றது. அது சமாதி! உடனே மனதில் பின் வடும் கவிதை பிறக்கிறது.

*"ஒரே இரவில்*
*சூறாவளி வந்து*
*உயர்ந்த மணல் கோட்டைக்*
*கட்டியது*
*யாருடைய சமாதி இது?"*

மணற்குவியலைப் பார்க்கிற கவிஞருக்கு அது மணற்குவியல் என்பதைத் தாண்டிச் சமாதியாகத் தோற்றம் தெரிகிறது. இப்படியான தோற்ற உணர்வு கவிஞனுக்கு மட்டுமே கிடைக்கும்.

இது போலவே ஸ்பானியப் புதுக்கவிஞர் தன்னுடைய கவிதை எப்படி இருக்க வேண்டும் என்பதை ஒரு ஆழமான படிமக் கவிதை மூலம் விளக்கிக் காட்டுகிறார்.

*"அறியாததை நோக்கி*
*எறியப்பட்ட*
*குருட்டுப் புறாக்களின்*
*பறத்தல்"*

குருட்டுப் புறாக்கள் பறத்தல் திசையை அறிவதில்லை. அவற்றிற்கு எல்லாமே புதுமையாக இருக்கும் கவிதையும் புதுமையை நோக்கிச் செல்ல வேண்டும் என்கிறார் கவிகோ.

## கடுமுனைப்பியம் (Ultraism)

உலகப் பெரும் போர்களால் ஏற்பட்ட பேரழிவை நாம் அறிவோம். ஆனால் அவற்றால் நன்மையும் விளைந்திருக்கிறது என்பது உண்மை! மனித மனத்தில் அந்த போர்கள் உண்டாக்கிய உணர்ச்சி நெருக்கடியால் கலை இலக்கிய உலகில் மிகப் பெரிய மாற்றங்கள் நிகழ்ந்தன. புதுப் புது இயக்கங்கள் தோன்றி கலை இலக்கிய உலகில் புதுமையும் புரட்சியையும் ஏற்படுத்தின. அப்படித் தோன்றிய இயக்கங்களுள் ஒன்றுதான் கடுமுனைப்பியம். இது 1919-1923 கால கட்டத்தில் ஸ்பானிய எழுத்தாளர்களால் தோற்றுவிக்கப்பட்ட இயக்கமாகும்.

*"மொழியின் புளித்துப் போன பழம்*
*பாணிகளைக் கவனமாகத் தவிர்த்தல்*
*உளுத்துப்போன உருவங்களை முற்றாக*
*நிராகரித்து விட்டு வினோதமான புத்தம்*
*புதுப் படிமங்களை கையாளுதல்"*
என்பது இந்த இயக்கத்தின் கொள்கை.

ஜெரார்டோ டீயீ ஒரு கவிதை எழுதினார்.

*"கிதார் ஒரு கிணறு*
*நீரின் இடத்தில் காற்று"*

கிதாரைக் கிணறாகப் பார்ப்பது மரபுக்கு மாறானது. அதிர்ச்சியூட்டினாலும் இரு புதுக்கவிதையின் பண்புகளுள் ஒன்று. வினோதமான படிமம் இது! உவமையின் பார்வை மேலோட்டமானது. படிமத்தின் பார்வை ஆழமானது.

*"உடலின் தாகம் கிணற்றைத் தோண்டியது*
*ஆன்மாவின் தாகம் கிதாரை இசைக்கருவியைக் கண்டுபிடித்தது"*
என்று விளக்கம் அளிக்கிறார் கவிக்கோ.

## படைப்பியம்

கடுமுனைப்பியம் இயக்கம் தோன்றியது போலவே இரண்டு உலகப் போர்கள் ஏற்படுத்திய அழிவு புறவுலகு மட்டுமல்லாது அகவுலகையும் பாதிக்கப் படைப்பியம் இயக்கமும் தோன்றியது. ஹ்யூபிடோப்ரோ என்ற சிலி நாட்டுக் கவிஞர் 1916 ஆம் ஆண்டு ப்யூனஸ் அயர்ஸில் இந்த இயக்கத்தைத் தொடங்கி வைத்தார்.

''பழைய இலக்கியப் போக்குகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதும் புதிய அழகுணர்வுக் கோட்பாட்டை ஏற்படுத்துவதும் தான்'' படைப்பியம் இயக்கத்தின் நோக்கமாக அமைந்தது. கவிஞன் இயற்கையைப் போல அவனது கற்பனை, அனுபவம், அறிவு, புறச்சூழல் கரு என்பது விதையாக அவனது மனத்தில் விழ கவிதை மரமாகிறது.

## முடிவுரை:

கவிக்கோ அப்துல் ரகுமான் தான் பார்த்த, படித்த, உணர்ந்த அனுபவக் கருத்துகளைச் சுவைபடத் தொலைப்பேசிக் கண்ணீர் என்னும் நூலில் உணர்த்துகின்றார். சங்க இலக்கியம் முதல் அண்மைக் காலக் கவிதைப்போக்கு வரை நன்றாக அலசுகின்றார். இன்று புதிதாக எப்படி கவிதை படைக்கப்பட வேண்டும் என்பது பற்றி ஏராளமான விளக்கங்களையும் பரிந்துரைகளையும் இந்நூலின் மூலம் கொடுத்திருக்கின்றார். கவிதை படைக்க விரும்பும் இளைஞர்கள் முதலான அனைவரும் கவிக்கோவின் பரிந்துரைகளை உள்வாங்கிக் கொண்டால் சிறந்த கவிதை இலக்கியங்கள் பெருகும் என்பதில் ஐயமில்லை.

வாழ்க கவிக்கோ. அப்துல் ரகுமான்.

தொகுதி 1 சுபகிருது மாசி மீ பகுதி 4

# திருக்குறள் வரலாறு

## *2. ஆசிரியர் கொள்கை*

***1903ம் ஆண்டு இதழின் மறுபதிப்பு*** | *ரா. ராகவய்யங்கார்*

ஒன்றோடொன்ற ஒவ்வாப் பல்சமயநெறிகளை விடுத்துப் பெரும்பான்மையும் எல்லார்க்கும் ஒப்பதோர் ஒழுக்கநூல் ஓதினமையாற் பன்மதத்தரும், தெய்வப்புலமைத் திருவள்ளுவரைத் தத்தங்கொள்கையினராகக் கருதுவர்.

*''சமயக்கணக்கர் மதிவழி கூறாது*

*உலகியல் கூறிப் பொருளிது வென்ற*

*வள்ளுவன்'' எனக் கல்லாடத்தினும்,*

*........... ''நன்றெ்ன*

*எப்பாலாவரு மியைபவே வள்ளுவனார்*

*முப்பான் மொழிந்த மொழி''*

எனத் திருவள்ளுவமாலையினும் கூறுமாற்றான் இஃது உரைக்கப்படும். அவருட் சைனர் இவரது திருக்குறளை வேண்டுமிடத்தெல்லாந் தங்கோட்பாட்டோடு ஒப்ப மேற்கோள் காட்டி, 'இஃது எம்மோத்து' என்பர். ''ஒருத்தனை அவ்வாறு ரட்ஷிக்க வேண்டினால் எமக்குக் காட்டியும் நிலங்காட்டியும், வஞ்சச்சொற் சொல்லவேண்டுவதில்லை. என்னை? 'பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்' என்பது எம்மோத்தாதலால்'' என்றார். 'நீலகேசித்தெருட்' டிற்கு விருத்தியுரை இயற்றிய சமயதிவாகரவாமநமுநிவர் என்பார். இவ்வாறு அந்நூலுரையிற் பலவிடத்துங் காணலாம்.

இனிச் சைவரும் அவ்வாறே தமது சித்தாந்த நூல்களிலும், அவற்றின் உரைகளினும், இவர் திருக்குறளை மேற்கோளெடுத்தோதி இவருரைத்தன மெய்ம்மொழி என்பார். இதனை,

*''தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி*

*வலைப்பட்டார் மற்றைய ரென்று - நிலைத்தமிழின்*

*றெய்வப் புலமைத் திருவள் ளுவரைத்த*

*மெய்வைத்த சொல்லை''*

எனவரும் நெஞ்சுவிடு தூதினும், சிவஞான போதம், சிவஞான சித்தி என்பவற்றுரைகளிலும் கண்டுகொள்க.

இனி, வைணவரும் இவர் மெய்ம்மொழியைத் தமது தமிழ் வேதத்தோடு கருத்தொத்தல் காட்டி மேற்கொள் கூறுப, கருத்தொத்தல் பரி மேலழகியார்க்கும் உடம்பாமென்பது "பற்றற்ற கண்ணே" "ஆராவியற்கை" என்பற்றுரையான் உணரப்படும். மேற்கோள் கூறுதலை "என்னீர்மை கண்டிரங்கி" என்பது முதலாய பெரியார் அருளிச் செயலுரைகளிற் கண்டுகொள்க.

இவ்வாறு பலசமயத்தவரும் இவ்வாசிரியரது திருக்குறளில் பலவற்றைத் தமது கொள்கைக்கிணங்க மேற்கோளெடுத்தோதுதல் மாத்திரையானே தத்தம் இனத்தாராகக் கருதுதல் இயைபுடைத்தன்று; எனனை? இஃது எல்லார்க்கும் பெரும்பான்மையும் ஒப்பதோர் ஒழுக்க நூலாதலானும், மேற்கோள்காட்டல் பலர்க்கும் ஒத்தலானும், தத்தஞ் சமயநூ லேயன்றி வேற்றுநூலினையும் ஆங்காங்குக் காட்டலானும் என்க.

சிவஞானபோதம், சிவஞானசித்தி என்பவற்றுரைகளிற் சைனரியற்றிய நாலமயினை எடுத்துக் காட்டினார் சிவஞான முனிவரும். "வேந்தொடுமாறு கோடல்" என்னும் சிந்தாமணியுரையில் "பிறரும் இச்சமயத்தாரும் 'சிறகா பெருகாமுறை பிறழ்ந்துவாரா' என்றதனானும் உணர்க" என நச்சினார்க்கினியர் கூறுவதனால் 'நாலடியார்' இயற்றியவர் சைனராதல் தெளிக.

வைணவாசிரியரும் தமிழ்வேதவரையிற் குறுந்தொகைப்பாட்டினை எடுத்துக்காட்டுப. இதனை "என்னீர்மை கண்டிரங்கி" என்பதன் உரைக் கண்ணே காண்க. குறுந்தொகை வைணவ நூலன்மை அந்நூலானே பெறப்படும்.

இதுகாறுங் கூறிப்போந்தவாற்றாற், பிறர் சொற்கொண்டு இவரது சமயந்தெளியலாதாமை நன்கறியலாகும். இந்நிலையிற் றெய்வப் புலவர் கொள்கையினை ஆராய்தற்கு இவரது வாய்மொழியே சிறந்த கருவியாதலால், அதனையே பற்றிப் புகுவோம்.

இவர் வழங்கிய கடவுட் பெயரெல்லாம் அருகனுக்குரிய பெயராதலானும், அவற்றுள் 'மலர்மிசையேகினான்' என்பது அவற்கே சிறந்ததொன்றுகலானும், சைனர் தாஞ் சிறப்பித்துக்கொண்ட கொல்லாமையே தலையாய அறமென்றாராகலானும், அச்சைனர் இயற்றிய நாலடி முதலியவற்றோடு இவர் நூல் கருத்தொத்தலானும் இவ்வாசிரியர் சைனர் ஆவர் எனிற்; - கூறுதும்; சைனராவர், 'உலகம் ஒருவனால் இயற்றப்பட்டதன்று' என்பாரன்றே? இதனை "மூவா முதலாவுலகமொரு மூன்றும்" என்னுஞ் சிந்தாமணியான் உணர்க. இக்கொள்கை, 'உலகை இயற்றினேன் ஒருவன் உண்டு' எனக் கொண்ட தெய்வப் புலவர் திருக்கருத்தோடு மலைதல் காண்க : என்னை?

*இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து*

*கெடுக வுலகியற்றியான் '' றென்றாகலான்.*

இனாதன்றிச் சைனர் வேதம் வேள்வி இரண்டனையும் நிந்திப்பார். இவ்வாறு, நீலகேசித் தெருட்டில் வேதவாத சருக்கத்தால் நன்கு விளங்கும். "வேள்விவாய்க் கண்படுத்தும் நாளுலப் பித்திட்டர் நமரலா தாரெல்லாம்" என்றார் சிந்தாமணியாரும்.

*''வேத வேள்வியை நிந்தனை செய்துமு*

*லாத மில்லி யமணர்'' என்ப.*

இனாது, "அந்தணர் நூல்" "மற்ப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான், பிறப்பொழுக்கங் குன்றக்கெடும்" "ஆபயன் குன்று மறுதொழிலர் நூன் மறப்பர்" என்று வருந் தேவர் திருவாய்மொழிகளோடு பெரிதும் முரணுமாறு உய்த்துணர்ந்துகொள்க.

சைனர் "பார்ப்பன வோத்தும்" என்னும் நீலகேசிச் செய்யுளாற் பார்ப்பார் ஒத்தும், அதன்கட் கூறப்பட்ட அறமும் தமக்கு உடன்பாடன்மை கூறினார்.

திருவள்ளுவனார், பார்ப்பாரையும், அவரது ஒத்தினையும், அதன்கட் கூறப்பட்ட அறத்தினையும், அஞது நிகழ்த்துதற்குரிய பிரமசரிய முதலாய நிலை நான்கினையும் போற்றியுரைத்ததன்றி, "அறுதொழில் நூன்மறப்பர், காவலன் காவா லெனின்" என்பதனால் அதனை மறத்தலே உலகிற்குக் கேடு பயப்பதாகக் கொண்டார். சைனர்க்கு' அறுதொழிலர்' என்றதனால் வேள்விக்கு உடன்பட்டாராதல் சொல்லாதே அமையும். 'இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு, நல்லாற்றி னின்ற துணை '' என்பதனால் நிலை நான்கு கொண்டமை காண்க.

இவ்வாறாகவும், "அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றா னுயிர் செகுத் துண்ணாமை நன்று" என்பதனால் வேள்வியை இழித்துக் கூறினாராலெனின்;- அற்றன்று ; இவர் ஒழுக்கங்களை வேதத்தோடும் மனு முதலிய தொன்னூல்களோடும் பொருந்த உரைக்கின்றாராதலின், அம்மனு (நூலில், "நூறாண்டு பரிமேதஞ் செய்தானுக்கும் சாந்துணையும் புலான்மறுத்தானுக்கும் பயனொத்தன் (5 ம் அத்தியாயம், 53ம் சுலோகம்) என்பதன் கருத்தைத் தெளித்துரைத்தார் என்பதல்லதுரு, வேள்வியை இழித்தார் என்பது பொருந்தாதென்க. நூறு ஆயிரம் என்பன உபலக்கணம்.

ஈண்டு வேதத்தொடுபட்ட வேள்வியினை இழித்தலே இவர்க்குக் கருத்தாயின், தாமே அவ்வேதத்தையும், அதன்கட் கூறப்பட்ட அறத்தையும் போற்றியுரைத்ததோடும், இறுதொழிலர் என்பதனுல் வேள்விக்கு உடன்

பட்டதனோடும், தேவரை "அவியுணவி னான்றோர்" என்றதனோடும் மாறு கொளக் கூறினார் ஆவர். " அவியாகிய உணவு- தேவர்க்கு வேள்வித் தீயிற் கொடுப்பன" என்றார். பரிமேலழகியாரும். "யாதுபயன் புலான் மறுத்தான் எய்தும் அதனைக், கனி கிழங்கு தானியம் இவற்றான் உய்யும் முனிவனும் எய்தான்" (5ம் அத்தியாயம், 54ம் சுலோகம்) என்பதனால், மனநூலுடையார் முனிவர் ஒழுக்கங்களை இழித்தார் என்பது இயையாதவாறு போல ஈண்டுங் கண்டுகொள்க. தேவர் திருவாயானே இந்நூன்முழுதும் பொருள் விரித்துரைப்பக்கேட்ட சான்றோர் பலரும் இந்நூலை வேதத்தொடும் ஒப்பித்தலானும் அதனுண்மை உணர்க.

இனித் தெய்வப்புலவர் வழங்கிய கடவுட்பெயரெல்லாம் அருகற்கேயன்றிப் புத்தர்க்கும், எமது கடவுளர்க்கும் ஒக்கும் என்பது சைனர் தமியற்றிய நிகண்டு களானே உணரற்பாற்று.

"மலர்மிசையேகினான்" என்பது புத்தற்கும் பெயராதலால் அருகற்கே சிறந்தபெயர் ஆகாது.

"பூவேறுநான்முகன்" (திருவாசகம்) என்பதனால் இப்பெயர் அயனையுங் குறிக்கும்.

"எரியாய தாமரைமே வியங்கினரு மிடைமருதுமேவியவெம் மீசனாரே" (தேவாரம்) என்பதனாற் சிவனையுங் குறிக்கும்.

"தண்டாமரை சுமக்கும் பாதப் பெருமானை" (திருவாய்மொழி) என்பதனாற் றிருமாலையுங் குறிக்கும்.

இஃது ஒழுக்க நூலாதலால், ஒழுக்கங்கூறும் நூல்களெல்லாவற்றோடுங் கருத்தோற்றுமை கொள்ளுமாதலின் நாலடிக்கே சிறப்பித்தொத்தல் இல்லையென்க. இவற்றான், இவர் சைனரன்மை தெள்ளிதின் உணரப்படும்.

மற்று இவர், வேதம், கடவுள், உயிர், பூதமைந்து, புலான் மறுத்தல், தவம் முதலியன கோடலாற் பௌத்தருமாகார். "பூதமைந்து மகத்தே நகும்." என்பதனால். இவ்வாசிரியர் ஐந்து பூதம் கொண்டமை காண்க; பௌத்தர் நான்கு பூதமே கொள்வர். "ஊன்றின்ன விழுக்கென்னா னுயிரினையு முளதென்னா, னோன்றலையு நேர்ன்பென்றா னோக்குடைய கணிகையரே, போன்றிருந்து பொதியறுக்கும் புத்தன்" (நீலகேசி, குண்டலகேசிவாத சருக்கம்14.) என்பதனால் ஆன்மா, புலான்மறுத்தல், தவம், முதலாயின பௌத்தர்க்குக் கொள்கையல்லவாதல் கண்டுகொள்க.

மேற்கூறியவாற்றால், தெய்வப்புலமை திருவள்ளுவனார் வேதவழக்கொடு பட்ட கொள்கையினராவர் என்பது எளிதின் உணரற்பாற்று.

# தொல்காப்பியத்தில் கண்டும் காணாமை

***2 (ஆம் தொடர்) (முந்திய இதழின் தொடர்ச்சி)***

தி. பக்கிரிசாமி
ஆசிரியர்ப்பயிற்சி முதுநிலை விரிவுரையாளர்
36, அபிராமி தெற்கு வீதி,
திருமலைராயன்பட்டினம், காரைக்கால்.

## கண்டும் காணாமை எப்படி?

***செய்யுளியலில்***

***சூத்திரம் 1 : நாற்சீர் கொண்டது அடி எனப்படுமே***

***சூத்திரம் 2 : அடியுள்ளனவே தளையொடு தொடையே***

***சூத்திரம் 3 : அடியிறந்து வருதல் இல் என மொழிப***

இந்த சூத்திரங்களில்

தளையும் தொடையும் 4-சீர்கள் கொண்ட அடியில் மட்டுமே உள்ளன--என்றும் வரும் என்றும் விதிகள் உள்ளன.

ஆனால் இதே செய்யுளியலில்

"வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும் ஐஞ்சீர்" அடியும் உளவென மொழிப என்ற சூத்திரப்படி வெண்டளையும் ஆசிரியத்தளையும் கொண்ட 5 சீர்கள் உடைய அடிகளும் உள்ளன. மேலும் 6 சீரடிகள் போன்ற அடிகளும் உள்ளன என்ற இலக்கண விதிகள் இருக்கின்றன. முன்னால் காட்டப்பட்டன பின்னும் காணலாம்.

இவ்விதிகள் முற்றும் முரண்பட்டவை என்பதை எத்தனைப் பேராசிரியர்கள் கற்பிக்கிறார்கள்?

உரைக்காரர் பேராசிரியர் கண்டுள்ளாரே?

பேராசிரியர் கண்டுள்ளார் என்று கூறி இக்கட்டுரையை மறுக்க முனையலாம்.

அப்படி மறுக்கும் பேராசிரியரின் கருத்தை எத்தனைப்பேர் ஏற்கிறார்கள்? பேராசிரியரின் கருத்தை அறிந்துள்ளார்கள்? எவரும் இல்லை என்பதற்குரிய காரணத்தைக் காட்டும் ஆதாரங்கள் வருமாறு. 1) பேராசிரியர்

செய்யுளியல் 1-ம் சூத்திரத்தில் "தளை" என்ற உறுப்பே இல்லை என்கிறார் இதனை எத்தனைப்பேர் ஏற்றார்கள்? ஏற்கிறார்கள்? 2) இப்படி தளையே இல்லை என்ற உரை ஆசிரியர் பின்னால் பலவாறு மாறியுள்ளார் என்றளவு இங்கு போதும்.

போதும் எனினும் நம்புவதற்காக வருவன 1) இயலிசை மயக்கம் என்ற நூற்பாவில் தளை கூறும் வழி என்றும் 2) 4சீர் அடியை சாதாரண அடி என்றும் கட்டளை அடி என்றும் பிரித்து கட்டளையடிக்கே தளை உண்டு என்றும் முரண்படுகிறார். இவ்வாறு தளையை தொல்காப்பியரும் குழப்புகிறார் எப்படி? 1) நாற்சீர் அடியில் மட்டுமே தளை உள்ளது என்றவர் 5 சீர் அடியிலும் பிற அடியிலும் உள்ளன என்றும் விதிகள் வரைந்துள்ளார். இவைகளில் எது சரி தளை இலக்கணத்தில் குழப்பம் வருமாறு 1) தளை, தளைவகை என்று பொதுவாகவும் வெண்டளை கலித்தளை என்று வகைப்பெயராகவும் கூறுகிற தொல்காப்பியர் செய்யுள் உறுப்புகளின் பட்டியலில் தளை என்ற பெயரையே சேர்க்கவில்லை மேலும் 2) தன் சீர் உள் வழி தளைவகை வேண்டாம் என்ற விதிப்படி வெண்சீர் என்றும் வெண்பாச்சீர் என்றும் கூறப்படுகிற காய்ச்சீர்கள் வெண்பாவில் எவ்வாறும்வரலாம் என்பதே இலக்கணமாகும். இதைத் தமிழாசிரியர்கள் ஏற்று காய்முன் நிறைமுதல் காய்ச்சீர் வரலாம் என்பதை ஏற்கிறார்களா? 3) நச்சரின் உரைப்படி ஒரு வெண்பா அடியில் தொடர்ந்து 4 காய்ச்சீர் வரக்கூடாது, வரவில்லை என்கிறார் இதையும் ஏற்கிறார்களா?

இவைகளால் தொல்காப்பியர் தளையை நம்பவில்லை உடன்படவில்லை என்பதை இனிக் காணலாம்.

## நம்பாமையைக் காட்டும் சூத்திரங்கள்

தொல்காப்பியர் நம்பவில்லை என்று நேரடியாகச் சொன்னால் விளங்காது. மேலும் ஏற்கவும் மாட்டார்கள் அதுபோல ஜாதி, மதம் இல்லை என்று திருமூலர் போன்ற மகான்கள் சொன்னதை ஏற்கவில்லை இன்னமும் ஏற்கவில்லை. இதுமாதிரி தளை பற்றியும் நேரடியாகச் சொல்லிப் பலனில்லை இதனால் பின்வருமாறு சுற்றி வளைத்துச் சொல்ல வேண்டும். சொன்னால் மட்டுமே விளங்கும் மேலும் உடனே ஏற்கும் மனம் வராது.

## பேச்சு மரபு

இலக்கணத்துக்குப் பேச்சு மரபு பொருந்துமா என்று இயல்பாகக் கேட்கலாம். ஆனால் வெகுகாலமாகப் புரியாத பல இலக்கண முடிவுகளைப் பேச்சு முறையில்தான் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்தார்கள் என்பதற்கு உதாரணம் பின்னால் காட்டப்படும். இங்கு காட்டினால் வேறு செய்தி ஆகிவிடும் தொடர்ச்சி விடுபடும் எனவே பின்னால் காணலாம்.

## பேச்சு மரபுக்கு உதாரணம்

வருகிற பேச்சு (பேச்சை) படித்தால் புரியும். ஒருவர் ''ஐயா நீங்கள் கேட்ட (கேட்கிற) நாகலிங்க மரம் நாகப்பட்டினத்தில் இருக்கிறது'' என்று சொன்னால் அவரிடம் அந்த மரம் எந்தத் தெருவில் இருக்கிறது என்று கேட்கலாம் அதற்கு அவர் தெரியும் என்றோ தெரியாது என்றோ சொல்லலாம் (நிற்க). இன்னொருவர் ஐயா நீங்கள் கேட்ட மரம் நாகப்பட்டினத்தில் இருக்கிறது என்கிறார்கள் என்று சொல்லலாம். அப்படி சொன்னவரிடம் எந்தத் தெருவில் இருக்கிறது? என்று கேட்டால் அவர் ''ஐயா எனக்குத் தெரிந்தால் இருக்கிறது'' என்று சொல்லமாட்டேனா? என்று திருப்பிக் கேட்கலாம் அல்லது இருக்கிறது என்றா சொன்னேன்? என்கிறார்கள் என்று தானே சொன்னேன். இப்படிச் சொன்னால் எப்படித் தெரியும் என்று சொல்லலாம்.

## இப்பேச்சால் தெரிவன

ஒருவர் ''இருக்கிறது'' என்று முடித்தால் அவருக்கு அந்தச் செய்திபற்றித் தெரியும் என்பது கருத்து. இப்படிச் சொல்லாமல் ''இருக்கிறது என்கிறார்கள்'' என்றால் அவருக்கு அந்தச் செய்தி தெரியவில்லை மற்றவர் சொன்ன செய்தி அவ்வளவுதான் தெரியும் என்பதே கருத்து.

## என்கிறார்கள் என்பதை கூறும் வேறுமுறைகள்

இருக்கிறது என்கிறார்கள் என்ற வார்த்தையைச் சொல்லாமல் 1) இருக்கிறது என்று சொல்லுகிறார்கள் என்றும் 2) இருக்கிறது என்று பெரியவர்கள் சொல்லுகிறார்கள் அல்லது தெரிந்தவர்கள் அறிந்தவர்கள் சொல்லுகிறார்கள் என்றும் சொல்லலாம். இத்தகைய பேச்சை (நிச்சயம்) கேட்கலாம்.

## இப்பேச்சு புலவரிடம் மாற்றம் (பெற்றது ஏன்? எப்படி)

1) மேலே சொல்லியவாறு புலவர்கள் வாக்கியம் அமைக்கலாம் 2) பேச்சில் என்கிறார்கள் என்று நிகழ்காலத்தில் பேசுவது நியாயம். ஆனால் புலவர்கள் மற்றவர்களிடம் கேட்ட செய்தியை எழுதும் பொழுது அது இறந்தகாலச் செய்தி ஆகிவிடும். இவ்வாறு படித்த செய்தியை எழுதும் பொழுது இறந்தகாலம் ஆகிவிடும் இதனால் பேச்சு என்கிறார்கள் என்ற நிகழ்காலம் எழுத்தில் என்றார்கள் என்ற இறந்தகாலமாகும். மேலும் என்றார்கள் என்று மட்டும் சொல்லாமல் அறிஞர்கள் வல்லவர்கள் முன்னோர்கள் என்று எழுவாய் (Subject) சேர்த்துச் சொல்லலாம். 3) நான் சிறுவனாக இருந்தபோது இந்த இடத்தில் படித்தேன். அங்கே விளையாடுவேன் என்று எதிர்காலத்தில் பேசுகிற முறையும் வழக்கில் உண்டு. இவ்வாறு இறந்த காலத்தை '' எதிர்காலத்தால்'' சொல்வதைத்

தொல்காப்பியர் சேனாவரையர் போன்றோர் ஏற்றுள்ளார்கள். இந்த முறையில் சூத்திரத்தில் ''என்றார்'' என்று சொல்லாமல் என்ப மொழிப என்று எதிர்காலத்தில் கூறலாம் 4) புலவரிடம் இன்னொரு மாற்றம் அதாவது வாக்கியத்தைக் கூர்ந்து நோக்கினார்கள் எப்படி என்றால் என்றார்கள் என்று சொல்லும் என்று அறிஞர்கள் சொன்னார்கள் என்று சொல்லும் படர்க்கையைக் (3rd person) காட்டும் எப்படி என்றால் என்றேன் என்றால் தன்மை, என்றான், என்றார் என்றால் படர்கை ஆகும். இதனால் தங்களுக்குத் தெரியாத செய்திகளைப் படர்கை வினை என்ப வகையால் தொகுத்தனர் வகுத்தனர் வரையார் என்றெல்லாம் வாக்கியம் கொண்டார்கள்.

இவ்வாறு ''என்றார்'' என்ற சொல் கொண்டமைக்குத் தொல்காப்பியத்தில் சான்றே அடுத்த தலைப்பு.

## தொல்காப்பியச் சான்று

''சூத்திரத்தில் பன்னீர் எழுத்தும் உயிர்'' என்றால் இந்த விதியைத் தொல்காப்பியர் தெளிவாக அறிவார் என்று நம்பலாம் ஆனால் சூத்திரத்தில் உயிரென மொழிப என்றே சொற்கள் இருப்பதால் தொல்காப்பியருக்குத் தெளிவாகத் தெரியவில்லை என்பது நியாயமே ஆகும். இவ்வாறு சொன்னதும் தமிழாசிரியர்கள் கோபப்படவேண்டாம். ஏன்? என்றால் காரணங்கள் 1) தொல்காப்பியர் காலத்தில் ஐ ஔ என்ற வரி வடிவங்கள் புலவரிடம் இருந்தன என்பதில் ஐயமில்லை ஆனால் 2) அக்காலப் பேச்சில் ஐ, ஔ என்ற எழுத்துக்களே இல்லை என்றதும் கண்டாயா? கேட்டாயா? என்று கேட்கலாம் ஆயினும் தொடர்ந்து பார்க்கவும் 3) இன்னமும் ஐ ஔ இல்லாத திராவிட மொழிகள் இருக்கின்றன 4) தொல்காப்பியருக்குப் பிந்திய பல நூற்றாண்டு காலம் வரை கல்வெட்டுகளில் ஐ ஔ இல்லை 5) தொல்காப்பிய இலக்கணப்படி பனாட்டு பனா அட்டு என்ற சொற்கள் ''பனை + அட்டு'' என்றே எண்ணப்படுகிறது. ஆனால் இதற்குரிய சூத்திரமான பனையின் முன்னர் அட்டுவரு காலை என்பதில் 1) ஆவயினான என்ற சொல்லும் வேறு பல சூத்திரங்களின் 2) முன்னர் வருகாலை என்பதும் 3) வருதல் என்று வாய்பாடும் நச்சரே கூறிய இலேசு சொல் ஆகும் இவ்வாறு பல இலேசு இருப்பதால் தொல்காப்பியருக்கு 1) நம்பிக்கை இல்லாத விதியே 2) மேலும் இந்த பனை பற்றிய முந்தய சூத்திரத்தில் ''என் மனார் புலவர்'' என்ற சொல் இருப்பதால் நிச்சயமாக உடன்பாடு இல்லாமை வெளிப்படும் வாசகர் விரும்பினால் விடை பெறலாம் 6) மொழி வரலாறு உண்டாகாத காலத்திலேயே இவ்வாறு ஐயம் கொண்ட செயல் ஏனைய துறைகளும் காணலாம் அதாவது தொல்பொருள் ஆராய்ச்சிக்கு உரியது. இவைகளால் தொல்காப்பியரின் பேரறிவு தெரிகிறது.

*தொடர்ச்சி அடுத்த இதழில்*

# சட்டக் கல்வியில் மாற்றம் அவசியம்

## மன்மோகன் சிங் வலியுறுத்தல்



புது தில்லி, மே 1 : சட்டக் கல்வியில் மாற்றம் கொண்டு வர வேண்டியது மிகவும் அவசியம் என்று பிரதமர் மன்மோகன் சிங் குறிப்பிட்டார்.

தில்லியில் சனிக்கிழமை நடைபெற்ற இரண்டாவது தலைமுறை சட்டக் கல்வி சீர்திருத்தம் தொடர்பான தேசிய ஆலோசனைக் கூட்டத்தைத் தொடங்கி வைத்து அவர் பேசியதாவது:

நீண்ட கால பலனைக் கருத்தில் கொண்டு சட்டக் கல்வியில் மாற்றம் கொண்டு வர வேண்டியது மிகவும் அவசியமாகும் .சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் பலன் பெற வேண்டுமெனில் சட்டக் கல்வியில் மிகப் பெரிய மாற்றத்தைக் கொண்டு வர வேண்டியது மிகவும் அவசியமாகும்.

தற்போது நமது சட்ட அமைப்பு மூலம் நாம் எத்தகைய பலன்களை அடைந்துள்ளோம் என்பதை விட இதனால் ஒடுக்கப்பட்ட மக்கள், பெண்கள், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன மக்கள் எந்த அளவுக்கு பயனடைந்துள்ளனர் என்பதை நேர்மையாக உரிய கண்ணோட்டத்துடன் நாம் பார்க்க வேண்டும். நமது சட்ட கல்லூரிகள் வெகு சிலவே உள்ளன. இதிலிருந்து உருவாகும் சட்ட வல்லுநர்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவாகவே உள்ளன.

இந்த சமயத்தில் குடியரசு முன்னாள் தலைவர் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் குறிப்பிட்ட ஒரு விஷயத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன். வசதி படைத்தவர்களுக்கு மட்டும்தான் உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ சட்டக் கல்வி சாத்தியம் என்ற நிலை இருக்க கூடாது என்று குறிப்பிட்டிருந்தார். தற்போதைய சூழலில் அவர் குறிப்பிட்ட வாசகத்தின் பொருளில் உள்ள அர்த்தத்தை அது கசப்பானதாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இது வரையில் எத்தகைய மாற்றமோ, சீர்திருத்தமோ சட்டக் கல்வியில் மேற்கொள்ளப்படவில்லை என்பது தான் எதார்த்தமான உண்மை.

சாதாரண பொதுமக்களுக்கும் விரைவான நீதி கிடைத்திட வழி செய்திட வேண்டும். அதற்கேற்ப சட்ட விதிகள் உருவாக்கப்பட வேண்டும். தாராளமய பொருளாதார சூழலில்

நிறுவனங்களிடையிலான ஒப்பந்தங்கள் எளிதில் அமல்படுத்த முடியும். அத்தகைய சூழலில் நமது சட்ட ஆசிரியர்கள் நிறுவனங்களுக்கான வழக்கறிஞர்களை உருவாக்குகின்றனர், இவர்கள் சட்ட ஆலோசகர்களாகவும், சட்ட அலுவலர்களாகவும் ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்காகச் செயல்படுகின்றனர்.

சட்டக் கல்வியில் போதிய சீர்திருத்தம் கொண்டு வரப்படும் போதுதான் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சட்டத்தின் மூலமான பாதுகாப்புக் கிடைக்க வழியேற்படும். தற்போது உள்ள சட்டக் கல்லூரி மாணவர்களுக்கான பாடத்திட்டத்தில் மாற்றம் செய்ய வேண்டும். அத்துடன் சமூகத்தின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இதன் பலன் போய்ச்சேர வேண்டும் என்ற எண்ணத்தை அவர்களிடையே விதைக்க வேண்டும்.

தற்போது கிடைப்பவை அனைத்துமே குறுகிய காலப் பலனாக உள்ளது. இந்த நிலை மாற வேண்டுமெனில் சட்டக் கல்லூரிகள் அதிகம் உருவாவதோடு அவற்றுக்குத் தலைசிறந்தவர்கள் தலைமை ஏற்க வேண்டும். சிறந்த ஆசிரியர்களைத் தேர்வு செய்ய வேண்டும்.

இந்த வகையில் பல மாற்றங்களை உருவாக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். இவ்விதம் தலைமை ஏற்கும் சட்ட வல்லுநர்களுக்கு சிறந்த ஊதியம் வழங்கப்பட வேண்டும். அதன் மூலம் தான் மேம்பட்ட சேவையை அவர்களிடமிருந்து எதிர்பார்க்க முடியும்.

சட்ட நூலகங்கள் மிகக் குறைவாகவே உள்ளன. அதிலுள்ள சட்ட புத்தகங்களின் எண்ணிக்கையும் குறைவாகவே உள்ளது. இத்துறையில் ஆராய்ச்சி மேற்கொள்ளும் மாணவர்களுக்கு உதவித் தொகை உள்ளிட்ட வசதிகள் செய்து தரப்பட வேண்டியது அவசியம். அதே போல இங்குள்ள சட்டகல்லூரிகள் உலகின் மிகச் சிறந்த சட்டகல்லூரிகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டு தேவையான தகவல்களை அளிப்பதாக விளங்க வேண்டும்.

சட்டப் பயிற்சிக்கான வசதிகள் மற்றும் படிப்பு முடிந்த பிறகு வேலை உத்தரவாதம் உள்ளிட்டவற்றை முறைப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. இவை அனைத்தையும் ஒருங்கிணைத்துச் செயல்படுத்த வேண்டும் என்றார் மன்மோகன்சிங்.

**நன்றி : தினமணி**

## ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா



தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச் சங்கம்

54, தமிழ்ச் சங்கச் சாலை

மதுரை - 625 001

தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.

செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1

தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/56 April 2010

# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்

[ தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது ]

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

**2010 - 2011ஆம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது**

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

| | | |
|---|---|---|
| இரா. அழகுமலை | முனைவர் க. சின்னப்பா | இரா. குருசாமி |
| செயலாளர் | முதல்வர் | [illegible] |
| மதுரைத் தமிழ்ச் சங்கம் | செந்தமிழ்க் கல்லூரி | [illegible] |

அனுப்புநர்,
**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

From
SECRETARY
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

BUSINESS POSTAGE ... 25 MAY ... MADURAI

பெறுநர் / To,

திருமிகு.இரா.அழகுமலை
எம்.ஏ.,எம்.பில்., அவர்கள்,
21-A முத்துராமலிங்கத் தேவர் தெரு,
கோச்சடை,
மதுரை 625 010.

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.